யுனெஸ்கோ

உலகைக் காட்டும் பலகணி

கூரியர்

மே 1970 ஆண்டுச் சந்தா ரூ. 10·50 தனிப்பிரதி ரூ. 1·00

பீஸ்டம்

முதல் பண்டைய கிரேக்க சுவரோவியங்கள் கண்டுபிடிக்கப்படுதல்

Photo © R. and S. Michaud - Rapho, Paris

உலகக் கலை கருவூலங்கள்

43

வெங்காயம் உண்ணும் மறை வல்லுநர்

400 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒருவரை இன்னும் பாகிஸ்தான் மக்கள் பாராட்டி வருகின்றனர். அவர் அரண்மனை விகடன்; வெங்காயம் உண்ணும் மறைவல்லுநர். சிரிப்பைவிட அழுகையை வருவிக்கும் வெங்காயத்தை விரும்பியதால் அப்பெயர் பெற்ருர். அறிஞர் தோபியாசா (தோ பியாசா: இரு வெங்காயம்) உண்மையாகவே உயிர் வாழ்ந்த ஒருவரா என்பதைப்பற்றி பாகிஸ்தான் மக்கள் கவலைப் படுவதில்லை. ஆயினும் அவர்கள் அவரது நகைத்திறத்தை எண்ணி மகிழ்கின்றனர். அவர் 16ஆம் நூற்ருண்டில் முகலாய அரண்மனையில் இருந்ததாகவும், அவரது நகைத்திறத்தைக் கண்டு பேரரசர் அக்பரே மகிழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது. அவரது நகைச்சுவை புகழ்மிகு துருக்கிய ஈரானிய கதாபிரியரும் விகடருமான நாஸ்ரெடினின் (யுனெஸ்கோ கூரியர், ஏப்ரல், 1909) நகைச்சுவை போன்றது. இங்கு 18ஆம் நூற்ருண்டின் படத்தில் இவ்விகடகவியைக் காணலாம். இப்படம் பொதுவாக கேலிச் சித்திரங்களைப் படைக்காத முகலாயக் கலையின் சிறந்த படைப்பாகும். நுட்பமாக வரையப்பட்ட இந் நுண்ணோவியம் (8 அங். × 5 அங்) இப்போது லாகூர் பொருட்காட்சி மனையிலுள்ளது.

யுனெஸ்கோ கூரியர்

மே 1970

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினால் பதின்மூன்று பதிப்புகளாக வெளியிடப்படுகிறது.

ஆங்கிலம்	ஜப்பானிஸ்
ஃபிரெஞ்சு	இத்தாலியன்
ஸ்பானிஷ்	ஹிந்தி
ரஷ்யன்	தமிழ்
ஜெர்மன்	ஹீப்ரு
அராபிக்	பெர்சியன்

அமெரிக்க ஐக்கிய நாடு

விற்பனை, வினியோக அலுவலகம்:
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.
ஆண்டுச் சந்தா ரு. 10.50

யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. செப்டம்பர்—அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினுய்
பாரிஸ்-7. ஃபிரான்ஸ்.

பிரதம ஆசிரியர்:
ஸாண்டி காஃப்ளர்

உதவிப் பிரதம ஆசிரியர்:
ரெனி காலோஸ்

பிரதம ஆசிரியருக்கு உதவியாளர்:
லூஸியோ அட்டினெல்லி

நிர்வாக ஆசிரியர்கள்:

ஆங்கிலப் பதிப்பு: ரொனல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு: ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு: அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு: விக்டர் கோலிபச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு: ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு: அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு: ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்கியோ)
இத்தாலியப் பதிப்பு: மரியா ரெமிட்டி (ரோம்)
ஹிந்திப் பதிப்பு: ஏ. சந்திரஹாஸன் (டில்லி)
ஹீப்ரு: அலெக்ஸாண்டர் பெலி (ஜெருசலம்)
பெர்சியப் பதிப்பு: ஃபெரெதூன் ஆர்தலன் (டெஹ்ரான்)
தமிழ்ப் பதிப்பு: தெ. பொ. மீனாட்சிசுந்தரன் (சென்னை)

தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியருக்குத் துணைவர்கள்:
எஸ். கே. தம்பா, மீ. முகம்மது முஸ்தபா

ஆராய்ச்சி: ஓல்கா ரோடல்

அமைப்பு, சித்திரம்: ராபர்ட் ஜாகுமின்

எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

The UNESCO Courier

May, 1970 No. 34 - 35

No. 11 - 1970 MC 69-1-251F

10 JUN 1970
MADRAS

பக்கம்

4 **பீஸ்டம்**
முதல் பண்டைய கிரேக்க சுவரோவியங்கள் கண்டுபிடிக்கப்படுதல்
— மைக்கேல் கானில் லக்கோஸ்ட்

10 **கெய்ரோ**
கல்லில் 1000 ஆண்டுகளின் வரலாறு
— அப்துல்-ரஹ்மான் ஜக்கீ

17 **பேரொளி அல் - அஸ்ஹர்**
இஸ்லாத்தின் பெருநகரம்

18 **கெய்ரோ அரும் பொருட்காட்சி மனையின் பழம் புகழ் கருவூலங்கள்**

21 **சான் அகஸ்டின்**
வரலாற்றுக்கு முற்பட்ட கொலம்பியாவில் புதைந்து கிடக்கும் புதிர்
— ஃபர்னண்டோ சான்ஜ்

26 **லெப்பென்ஸ்கி வீர்**
டான்யூப் ஆற்றங்கரையின் மேல் ஐரோப்பாவின் மிகப் பழங்கால குடியிருப்பு
— ஜீன் வைடல்

32 **அறிவியல் துறை சாராதவர் அறிவியலை ஆய்கின்றனர்**

34 **யுனெஸ்கோ செய்தியறை**

2 **உலகக் கலைக் கருவூலங்கள்**
வெங்காயம் உண்ணும் மறை வல்லுநர் (பாகிஸ்தான்)

அட்டைப் படம்



1968ஆம் ஆண்டு கோடையில் லுக்கேனியா வெனும் இத்தாலி மாநிலத்தில் புகழ்மிகு பீஸ்டம் கோயிலருகிலுள்ள இடுகாட்டில் இன்றுவரை அழியாமலுள்ள முதல் கிரேக்க சுவரோவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை கி. மு. 480இல் தீட்டப்பெற்றவை. 1969இல் பல சுவரோவியங்களுடன் வேறு சில கல்லறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றை வரைந்தவர்கள் லுக்கேனிய கலைஞர்களாவர். ஆயினும் அவற்றில் கிரேக்கப் பண்பு அல்லது கிரேக்கத் தொடர்பின் அடையாளம் காணப்படுகிறது. (4ஆம் பக்கக் கட்டுரை பார்க்கவும்). அட்டை மேல் பகுதியிலுள்ள சுவரோவியத்தில் போர் வீரனை வீட்டிற்கு வரவேற்கும் பெண்ணைக் காணலாம். அவள் மணமான பெண்களுக்கேயுரிய முக்காடு அணிந்திருப்பதால் அவன் மனைவியாக இருக்கக்கூடும். படத்திலுள்ள கொடி இது லுக்கேனிய ஓவியம் எனக் காட்டுகிறது. ஏனெனில் பண்டைய கிரேக்கர் கொடியேந்திச் செல்வதில்லை; கீழேயுள்ள படத்தின் விவரங்களுக்கு 8ஆம் பக்கத் தலைப்பைக் காண்க.

Photos Unesco- J. Chevalier



Photos Unesco - J. Chevalier

“நெப்டியூன் கோயில்” (கீழே) இன்றைய நேப்பிள்ஸிற்கு தெற்கே பீஸ்டத்தில் கி. மு. 5ஆம் நூற்றுண்டின் நடுவில் கட்டப்பெற்றது. ஏதென்ஸ் நகர் கோயிலைப் போன்று அமைக்கப்பெற்ற அக்கோயில் இன்றும் அழியாமலிருக்கும் பாசிடோனியா (பீஸ்டத்தின் கிரேக்க பெயர்) கட்டிடங்களில் ஒன்றுகும். கி. மு. 7ஆம் நூற்றுண்டில் கிரேக்கர் குடியேறி இந்நகரை நிறுவினர். கி. மு. 5ஆம் நூற்றுண்டின் இறுதியில் லுக்கேனியர் இதைப் பிடித்தனர். நெப்டியூன் கோயிலருகில் பெரிய இடுகாடும் ஆயிரக்கணக்கான கல்லறைகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (கீழே) இவற்றுள் ஐம்பது ஓவியங்கள் இன்னும் அழியாமல் காணப்படுகின்றன. இவை தாம் நமக்குக் கிடைத்துள்ள பண்டைய கிரேக்க சுவரோவியங்கள்.

Photo © Rene Burri - Megnum, Paris

பீஸ்டம்

முதல் பண்டைய கிரேக்க சுவரோவியங்கள் கண்டுபிடிக்கப்படுதல்

மைக்கேல் கானில் லக்கோஸ்ட்

சில மட்கலத் துண்டுகள், சுண்ணத் துண்டுகளில் காணப்படும் பல வண்ண வேலைப்பாடுகள், பாலிக் நாட்டஸ், ஸியூக்ஸிஸ், யூஃப்ரனுர் பற்றிய குறிப்புகள் ஆகியவைதாம் மூத்த ப்ளினி விவரித்த கி.மு. 5ஆம், 4ஆம் நூற்றுண்டுகளின் கிரேக்க ஓவிய மலர்ச்சியின் அடையாளங்களாக நமக்குக் கிடைத்துள்ளன.

சிறந்த பண்டைய சுவரோவியங்கள் மனித கரங்களால் அழிந்துபட்டன. போரின் அழிவுகள், ரோமானியர் சூறை, பண்டைய ஓவியர் பயன் படுத்திய சுவர்ப் பரப்பின் மென்மை ஆகியவற்றின் விளைவாக நாம் பிரோம் பிலீயாவின் சுவர்களையும் தனி வீடுகளையும் அலங்கரித்த ஓவியங்களை இழந்து

மைக்கேல் கானில் லக்கோஸ்ட் பிரெஞ்சு கலைத் திறனுய்வாளரும் வரலாற்றறிஞருமாவர். அவர் இலக்கிய, கலை ஏடுகளில் கட்டுரைகள் எழுதுவதுடன் குந்தர் ஸ்டட்கார்ட் 1966இல் வெளியிட்ட “இன்றைய ஐரோப்பிய சிற்பம்” எனும் நூலையும் எழுதினுர். 1967முதல் 1969வரை பிளாரன்ஸையும் வெனிஸையும் காக்கும் பன்னுட்டுப் பணியின் யுனெஸ்கோ பகுதியின் தலைவராக இருந்தார். வெனிஸ் பற்றிய யுனெஸ்கோ அறிக்கையை எல். ஐ. ராலட் ஆண்டிரியானுடன் சேர்ந்து எழுதினுர். இப்போது இவர் பண்பாட்டைப் பன்னுடுகளிக் பரப்பும் யுனெஸ்கோ பிரிவின் உறுப்பினராக உள்ளார்.

பீஸ்டத்தில் காணப்படும் வியத்தகு ஓவியம் முக்குளிப்பவரின் படம் (கீழே). இது மிகப் பழைய கல்லறையின் கூரைக் கல்லை அலங்கரிக்கின்றது. ஓவியத்தின் முழு விவரங்களைக் கீழே காணலாம். அது கடற்கரையில் பரந்த வானின் முன்னால் முக்குளிப்பவனின் நிழல் வடிவத்தைக் காட்டுகிறது. அதே கல்லறையின் சுவர்களில் பேசிக் குடித்து இசை மடுக்கும் பத்து இளைஞர்கள் அமர்ந்துள்ள கிரேக்க இழவு விருந்தின் எழிலோவியங்கள் மிளிர்கின்றன (மேலே). கி. மு. 480 இல் வரையப்பட்ட இத்தகைய விருந்துச் சித்திரங்களை ஏதென்ஸின் ஓவியக் கலங்களின் வாயிலாகவே உலகம் அறிந்தது.

கிரேக்க இயல்புடன் உயிர்த்தெழுந்த தேர்கள்

கி. மு. 4ஆம் நூற்றுண்டில் லுக்கேனியர்கள் பீஸ்டம் இடுகாட்டுக் கல்லறைகளின் சுவர்களில் கிரேக்க கலையியல்பில் ஓவியங்கள் தீட்டினர். குதிரை மீதமர்ந்துள்ள போர்வீரன் (இடப்புறம்), நான்கு குதிரைத் தேரோட்டம் (கீழே வலப்புறம்), தேரில் நிற்கும் சிறகமைந்த வெற்றி (மேலே வலப்புறம்) போர், வெற்றிக் காட்சிகள் பல காணப்படுகின்றன. வலப்புறப் படத்தின் இடக்கோடியில் மறு பிறப்பைக் குறிக்கும் மாதுளம் பழங்கள் தொங்கும் கிளைகளைக் காணலாம். தென் இத்தாலியிலுள்ள டாரண்டோவின் கிரேக்க கலங்கள் லுக்கேனிய ஓவியர்களுக்கு உணர்ச்சியூட்டின. ஆயினும் அவர்கள் தமது காலத்துக் கிரேக்கர்களைப் போலல்லாமல் மாறுபட்ட வண்ணங்களை மிகுதியாகப் பயன்படுத்தி எழிலூட்ட விழைந்தனர். கீழே: பீஸ்டம் கண்டுபிடிக்கப்பெற்ற இக் கல் சவப்பெட்டிகள் 1·80 மீட்டர் நீளமும் 1 மீட்டர் அகலமும் (6×3 அடி) இருந்தன. பீஸ்டத்தின் ஓவியம் தீட்டப்பெற்ற 150 கல்லறை சுவர்களும் அண்மைக்கால புதைபொருளாராய்ச்சியின் முக்கிய கண்டுபிடிப்புகளாகும்.

Photos Unesco- J. Chevalier



விட்டோம். ஓவியங்களை நாம் காண முடியாமையினால், பண்டைய குடுவை ஓவியங்களிலிருந்தோ, ரோமானியக் கலைஞர்கள் வரைந்த பிரதிகளிலிருந்தோ அவை எவ்வாறு இருந்தன என்பதை ஓரளவு ஊகித்துக் கொள்ளலாம்.

1968ஆம் ஆண்டு கோடையில் ஒரு நாள் தெற்கு இத்தாலியிலுள்ள பண்டைய கிரேக்க நகராகிய பீஸ்டமின் பழைய மதில்களுக்கு ஒரு மைல் தொலைவிலிருந்த புதை நிலத்தின் 4ஆவது கல்லறையினுள் கதிரவன் ஒளி படர்ந்ததும் இந்நிலை மாறியது. அப்போது அங்கு நிகழ்ந்த விரிவான ஆராய்ச்சியின் விளைவாக எழில் மிகு சுவரோவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 2500 ஆண்டுகளாக மறைந்து கிடந்த சுவற்றில் ஈமச் சடங்கு விருந்து, கிரேக்க வழிபாடு போன்ற காட்சிகள் காணப்பட்டன.

அவ்வோவியங்கள் முன்னால் அங்கு கண்டுபிடிக்கப்பெற்ற சில லுக்கேனிய கல்லறை ஓவியங்களினின்று முற்றிலும் வேறுபட்டவை என்பது உடனே தெளிவாயிற்று. அவை பண்டைய கிரேக்க மட்கலங்களில் காணப்பட்ட ஓவியங்களை ஒத்திருந்தன. கல்லறையின் இரு நீண்ட சுவர்களில் சிவப்பு, கறுப்பு, மஞ்சள், நீலம் ஆகிய வண்ணங்களில் இரு ஈமச்சடங்கு விருந்துக் காட்சிகள் வரையப்பட்டிருந்தன. அதில் தாடியுள்ள பத்து இழவு விருந்தினர் வெற்றிச் சின்னமணிந்து ஒரே கீற்றில் வரையப்பட்ட இருக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தனர்.

அவர்கள் இசை முழங்க, ''கட்டபாஸ்'' எனும் விளையாட்டில் ஈடுபட்டிருப்பதைப் (மதுவைத் திறமையுடன் கிண்ணங்களில் மாற்றிக் கொண்டிருப்பதை) படம் காட்டுகிறது. அது காம உணர்ச்சியை மிகுதியாகக் காட்டுகிறது. குட்டையான சுவர்களில் குழலோன் ஒருவன் சவ ஊர்வலத்தின் முன்னால் செல்வதையும், கிண்ணம் ஏந்திச் செல்பவன் மது வழங்குவதையும் காணலாம்.

உருவ ஒற்றுமையும் வண்ண நயம் மாறுவண்ணம் நிறங்களைப் பயன்படுத்தியிருப்பதும் பீஸ்டம் நகரின் கிரேக்கக் கலைஞர்களின் ஓவியத் திறமை வளர்ச்சியைக் காட்டுகின்றன. அச்சுவரோவியங்கள் இருப்போர், இறந்தோர் ஆகிய இருதிறத்தோருக்குமுரிய கிரேக்க மதச் சடங்குகளைக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

கல்லறையை முடியுள்ள கல்லின் உட்பக்கத்தில் காணப்படும் காட்சி புதுமையானதாகும். அதில் இரு மரங்களுக்கிடையிலுள்ள குறுகிய மேடையிலிருந்து குதித்து மூழ்கப் போகும் இளைஞன் ஒருவன் வானத்திற்கும் கடலுக்குமிடையே காட்டப்பெற்றுள்ளான். ஆகவே அதற்கு ''டூம்பா டெல் டஃப்பட்டோரா'' (மூழ்குபவன் கல்லறை) எனப் பெயரிட்டுள்ளனர். சில நுட்பமான மரபியல்புகளிலிருந்தும், குறிப்பாக உடற்பயிற்சியாளரின் கண்கள், தசைக் கூறமைவு, கல்லறையில் கண்டெடுக்கப்பெற்ற குடுவை ஆகியவற்றிலிருந்தும் இவ்வகழ்வாய்வுகளை நடத்தி வந்த சாலர்ஞே—பீஸ்டம் மாவட்ட பழமைச் சின்ன மேற்பார்வையாளர், பேராசிரியர் மாரியோ நப்போலி அஃது ஏறக்குறைய கி:மு. 480-ஐச் சேர்ந்தது எனத் திட்டமாகக் கூறுகிறார்.

அப்போது பீஸ்டம் போசிடோனியா என்று அழைக்கப்பட்டு வந்தது. சாலர்னோ வளைகுடாவில் இன்றுள்ள நேப்பிள்ஸுக்குத் தெற்கே 80 கிலோ மீட்டர் (50 மைல்) தெற்கிலிருந்த அந்நகர் கிரேக்கப் பெரு உலகின் முக்கிய நகர்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. அதன் நிறுவனங்கள், மொழி, சமயம், கலை எல்லாம் கிரேக்க மயமாக அமைந்திருந்தன. அப்போது லூக்கேனிய மலை நாட்டோர் அருகிலுள்ள மலைகளிலிருந்து இறங்கி வந்து கிரேக்கக் குடியேற்ற நாட்டவரை இன்னும் விரட்டவில்லை. ஆகவே ''மூழ்குபவன் கல்லறை'' ஓவியங்கள் மரபு ஒழுங்கு, பண்பாடு, அரசியல் ஆகிய முறைகளின்படி கிரேக்க ஓவியங்களாக அமைந்திருந்தன. கிரேக்க ஓவியன் ஒருவன் அவற்றைத் தீட்டியிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை.

அவற்றைப் போன்ற வேறெதும் அதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. மேற்பார்வையாளர் மாரியோ நப்போலி கூறியதுபோல ''இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள பண்டைய கால கிரேக்க ஓவியங்களுள் அவை தாம் முதலில் கண்டுபிடிக்கப்பட்டவை; இன்னும் வேறெதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.'' இக்கருத்தையே உலகப் புகழ்பெற்ற பிற கிரேக்க கலை, தொல்பொருளாராய்ச்சி வல்லுநரும் தெரிவிக்கின்றனர்.

''யுனிவெர்ஸ் தெ ஃபார்மெஸ்'' எனும் புகழ்மிகு நூல் திரட்டில் ''லா கிரேஸ் கிளாசிக்'' எனும் தொகுதியில் கிரேக்க கலை வல்லுநரான பிரெஞ்சு ஆசிரியார் ஃபிராங்கால் வில்லார்டு தமது கட்டுரையில் ''கி.மு. 480-ஐச் சேர்ந்த பொருள் பொதிந்த வியத்தகு கல்லறை ஓவியம் பிஸ்டம் நகரில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட வரை சாதாரண ஓவியர்கூட வரைந்த கிரேக்க ஓவியம் எதுவும் நமக்குக் கிடைத்ததில்லை'' எனக் குறிப்பிடுகிறார்.

இதில் மற்றோர் அரிய இயல்பும் காணப்படுகிறது. அதாவது பண்டைய கிரீஸில் கல்லறை ஓவியங்கள் இருந்ததாக இதற்கு முன்னால் நமக்குத் தெரியவில்லை. கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்துதான் கல்லறை ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை கிரேக்கப் பெரு உலகின் எல்லைகளில் தாம், அதாவது டாரெண்டோ அருகில், பாண்ட் யூக்ஸினில், அப்பூலியாவில் காணப்பட்டன. அங்கு வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பெற்றது. இட்ரஸ்கன் ஈமச்சடங்கு ஓவியங்களில் ''மூழ்குபவனின் கல்லறை''யிலிருந்ததுபோலல்லாமல், மறை பொருளான, மத உணர்ச்சிகள் தோன்றின. ஆயினும் கல்லறைகளை அலங்கரித்தல் லுக்கேனியாவின் மரபாக இருந்தது எனத் தோன்றுகிறது.

இப்புதிரை விளக்குவதில் மேற்பார்வையாளர் நப்போலியும் அவர் நண்பர்களும் வெவ்வேறான இரு விளக்கங்கள் தருகின்றனர். முதல் விளக்கப்படி பீஸ்டம் இன்னும் கிரேக்க ஆட்சியிலிருக்கும்போது, கிரேக்கரல்லாத, புகழ்மிகு நகரவாசி ஒருவர் அவரது நாட்டு வழக்கப்படி புதைக்கப்பட்டார். இரண்டாவது விளக்கம் அக்கல்லறை ஓவியம் பித்தகோரஸின் கருத்தாகிய ''சடங்கு முறை முழுக்கு''க்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறதென விளக்குகிறது. இதன்படி, இறந்தவர் பீஸ்டத்திலிருந்த பித்தகோரஸ் குழு

புராண உலகமும் அன்றாட வாழ்க்கையும்

பீஸ்டம் கலைஞர்கள் கற்பனைக் கருத்துக்களையும் கிராமக் காட்சிகளையும் புகுத்தி இழவு வினை ஓவியங்களுக்கு ஒரு புதிய பண்பை அளித்தனர். இடப்புறக் கல்லறை ஓவியத்தில் இவ்விரு படைப்பையும் காணலாம். மேல் முக்கோணப் பகுதியில் கிரேக்கப் புராண மனிதனான சாரன எனும் கீழுலக ஆற்றுப் படகோட்டியை லூக்கேனிய ஓவியர் ஒருவர் இறந்தோரின் ஆவிகளைக் காத்திருக்கும் ஓடத்திலிருந்து வரவேற்கும் பெண்ணாகத் தீட்டியுள்ளார். கீழ் பகுதியில் (முன் அட்டைப் படத்தையும் பார்க்க) இறந்த மனிதரின் நினைவாக பலியிடப்படும் கன்றை. ஒருவர் நடத்திச் செல்கிறார். தலையில் காணிக்கை சுமந்து செல்லும் ஒருத்தி அதன் பின்னால் செல்கிறாள். அவளுக்குப் பின்னால் ரொட்டியும் மாதுளம் பழங்களும் ஏந்திச் செல்லும் இளம் பணியாளைக் காணலாம். ஊர்வல இறுதியில் இழவு கொண்டாடுபவர் செல்கிறார். இவ்வுருவங்கள் இன்றும் தென் இத்தாலியில் அப்பகுதியில் காணப்படும் லூக்கேனிய நாட்டுப்புற மக்களைப் போல் இருக்கின்றன. மேலே: வலப்புறம் கி. மு. 4ஆம் நூற்றாண்டில் கிரேக்க கலங்களில் காணப்பட்ட புராண விலங்குகளான சிறகுடைய வேட்டை நாய்கள். கீழே வலப்புறம்: நாட்டுப்புறக் காட்சி. மரங்களுக்கு முன்னால் உழவனின் வண்டி காணப்படுகின்றது. கி. மு. 4ஆம் நூற்றாண்டின் கிரேக்க கலையில் காணப்படாத இயற்கைத் தோற்றம் இதில் காணப்படுகிறது.

Photos Unesco- J. Chevalier

வின் கிரேக்க உறுப்பினராக இருந்திருக்கவேண்டும்.

இத்தகைய தொல்பொருளாய்வாளர் இன்னும் பல வியத்தகு செய்திகளையும் பிறகு அறிந்தனர். ஜூலை 12, 1969இல் லூய்கி பிரான்கோ எனும் உழவன் தனது வயலை மிக நீண்ட ஏர் முனையினால் உழுது கொண்டிருந்தபோது நகர மதில்களுக்கு 300 மீட்டர் (330 கெஜம்) வடக்கே மற்றொரு கல்லறையின் மேல் கல்லைக் கண்டான்.

இக்கல்லறை காலியாகவும் ஓவியங்களின்றியும் காணப்பட்டது. மூன்று மாத அகழ்வாய்வுக்குப் பின் அதே பகுதியில் 83 கல்லறைகள் நிலத்திற்கடியில் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் ஐம்பதில் சுவரோவியங்கள் இருந்தன. ஓவியங்களுள் முப்பதுக்குமேல் அழியாமலிருந்தன. அக்கல்லறைகளில் நான்கு அல்லது ஐந்தைத் தவிர பிறவற்றிலெல்லாம் கி.மு. 4ஆம் நூற்றாண்டை, அதாவது கி.மு. 340-ஐச் சேர்ந்த குடுவைகள் காணப்பட்டன.

ஒவ்வொரு கல்லறையிலும் ஓவியம் தீட்டப்பெற்ற 4 சுவர்கள் இருந்தமையால் (ஒவ்வொன்றிலும் கூரைக் கல் ஓவியம் தீட்டப் பெறவில்லை), ''மூழ்குபவன் கல்லறை''யுடன் இப்போது 120 முதல் 140 வரை பண்டைய சுவரோவியங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றை ஒன்றாகப் பார்க்கும்போது அவை ஒரு குறிப்பிட்ட கலைப்பண்பைக் காட்டுகின்றன எனத் தெரிகின்றது. அது முற்றிலும் கிரேக்கப் பண்பாக இல்லாவிடினும், அதில் கிரேக்க இயல்புகள் காணப்படுகின்றன. அதனுடன் அவ்விடத்தின் எழில் இயல்பும் கலந்துள்ளது.

இப்புதிய கல்லறைகளின் சுவர்களும் ''மூழ்குபவனின் கல்லறை'' சுவர்களைப்போலவே அருகிலுள்ள பொருட்காட்சிச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு அவை மெதுவாக உலர்ந்து வருகின்றன. அவற்றைக் கட்டி இறக்கிய கயிறுகள் ஈரமான சாந்தில் பதிந்த அடையாளங்களை அவற்றுள் சிலவற்றில் இன்னும் காணலாம். பண்டைய பொருள்களை ஆயும் போது, அவற்றை எடுப்பதற்குப் பயன்படுத்திய முறைகளின் இத்தகைய அடையாளங்கள் அக்கால நிகழ்ச்சிகளை நாம் நேரில் காண்பது போன்ற உணர்ச்சியை நமக்குத் தருகின்றன.

கி.மு. 4ஆம் நூற்றாண்டுக் கல்லறைகளில் சில எலும்புகளையும், அரிய அணிகலன்களையும் குடுவைகளையும் தவிர வேறெதுவும் காணப்படவில்லை.

கல்லறை சுவர்கள் 1 அல்லது 2 மீட்டர் நீளமும் 90 செ.மீ. உயரமும் (3 முதல் $6\frac{1}{2}$ அடி×3 அடி) உள்ள கற்களிலிருந்து வேண்டிய அளவுக்கு வெட்டப்பட்டன. பிறகு சாந்து பூசப்பட்டு, அநேகமாக இறுதியில் ஓவியம் தீட்டப் பெற்றிருக்கலாம்.

அவை எல்லாவற்றிலும் முக்கியமான உருவத்தைச் சுற்றி பூவணி வேலை காணப்படுகிறது. இஃது ஒரு வேளை கலைஞனுடைய கையாளின் வேலையாக இருக்கலாம். இது மிக விரைவாகச் செய்யப்பட்டுள்ளது. இவ்வேலைப்பாடுகளில் கொடி, பூ, முட்டை, புத்துயிர்ப்பின் சின்னமாகிய மாதுளம் பழம் போன்றவை மிகுதியாகக் காணப்படுகின்றன.

சிலவேளை இவ்வேலைப்பாடு மட்டும் தான் காணப்படுகின்றது. ஒரு கல்லறையில் புகழ்மிகு பீஸ்டம் ரோஜாக்களின் பின்னல் வேலைப்பாடு மட்டும் காணப்படுகின்றது. பிறவற்றில் தெளிவற்ற பூப்பின்னல் வேலைப்பாடு மூலை விட்ட சாய்வில் வரையப்பட்டுள்ளது.

இத்தகைய கல்லறை ஒன்றில் கையொப்பமிடப் பெற்ற ஒரே குடுவை கிடைத்தது. அதில் பைத்தன் எனும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அவனும் அஸ்டியாஸ் என்பவனுமே திருகிய இரு கைப்பிடிகளையுடைய குடுவைகளைத் தீட்டிய புகழ்மிகு ஓவியர்களாவர். பீஸ்டம் இக்குடுவைகளுக்குப் பெயர் பெற்றது. இவர்களுள் ஒருவரோ இருவரோ இந்த ஓவியங்களைத் தீட்டினரா என்பது

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)





கெய்ரோ
கல்லில் 1000 ஆண்டுகளின் வரலாறு

Photo © Abdel Fattah Eid, Cairo

எகிப்திய மன்னன் மெனஸ் 5,000 ஆண்டுகளுக்கு முன் நைல் கழிமுகப் பகுதியை வென்று, வட, தென் பகுதிகளை இணைத்ததிலிருந்து எகிப்து எகிப்தாகவே இருந்து வந்துள்ளது. கெய்ரோ எகிப்தின் நடுவிடமாகும். எகிப்தின் அராபிய பெயர் மிஸ்ர். பல நூற்றுண்டுகளாக எகிப்தின் தலைநகரையும் மக்கள் மிஸ்ர் என்றே குறிப்பிட்டனர். இவ்வாருக நாட்டுக்கும் தலைநகருக்கும் ஒரே பெயர் வழங்கி வந்தது. ஏனெனில் இப்பெரிய நகரில் எகிப்திய வரலாற்றின் தொகுப்பைக் காணலாம்.

—சர்வட் ஒக்காஷா
பண்பாட்டு அமைச்சர்
ஐக்கிய அராபியக் குடியரசு

அப்துல் - ரஹ்மான் ஜக்கீ

ஐக்கிய அராபியக் குடியரசை சேர்ந்த அப்துல்-ரஹ்மான் ஜக்கீ இஸ்லாமிய வரலாறு, தொல் பொருளாராய்ச்சி, இடைக்கால கெய்ரோவின் வரலாறு ஆகியவற்றில் வல்லுநர். இவற்றைப் பற்றி இவர் "தி சிட்டாடல் ஆப் சலாஹ் எல்-தீன்", "கெய்ரோ: ஃப்ரம் காஹர் ஜாபர்டி", "கன்சைஸ் என்சைக்ளோபீடியா ஆப் கெய்ரோ" போன்ற பல நூல்கள் எழுதியுள்ளார். இவர் கெய்ரோவிலுள்ள இஸ்லாமிய தொல் பொருளாராய்ச்சி நிலைய இசை நூல் விரிவுரையாளராகவும், அராபிய மொழிக் கழக "நாகரிக குழு"வுக்கு அறிவுரையாளராகவும் பணியாற்றுகிறார். இவர் "கன்சைஸ் அராபிக் என்சைக்ளோபீடியா 1960-68" இன் ஆசிரியர் ஆவர்.

இஸ்லாமிய வரலாற்றுக் கயிற்றினில் கோக்கப்பட்ட முத்துக்களைப் போன்று, இஸ்லாமியப் பெருநகரங்கள் பல, மந்திரப் பெருங்காட்சிகளை நம் அகக் கண்முன் தோற்றுவிக்கின்றன. கார்டோவா (கர்துபா), கெய்ரோ (அல்-காஹிரா), தமாஸ்கஸ் (திமஷ்கு), அலெப்போ (ஹலப்), பக்தாத், புகாரா, ஸமர்கந்—முடிவேயில்லாத ஒரு பட்டியலிது. இந்நகரங்களில் கெய்ரோ ஒரு மகத்தான இடம் பெற்றுள்ளது.

இஸ்லாம் புத்துருப் பெற்றுத் தோன்றிய காலத்திலிருந்தே, கெய்ரோவும் எகிப்தின் தலைநகர் என்ற நிலையை அடைந்தது; இஸ்லாத்தின் காவல் அரணாக மட்டுமின்றி, ஆயிரம் ஆண்டு காலத்திய கலைச் செல்வங்களையும் தன்னுள்ளே கொண்டதாக அது இன்றும் வாழ்கிறது.

இஸ்லாமிய கலீபாக்களில் இரண்டாமவரான ஹலரத் உமர் காலத்தில்—கி.பி. 641இல், அம்ருப்னுல் ஆஸ் எகிப்தை வெற்றி கண்டதோடு, கெய்ரோவின் வரலாறும் துவங்குகிறது. புராதன பாபிலோனிலிருந்து வந்த மக்களின் குடியிருப்புப் பகுதியிலே அமைந்திருந்த ஒரு ரோமன் கோட்டையை அம்ரு கைப்பற்றினுர். பழைய கெய்ரோவில் இக்கோட்டையின் சின்னங்களை இன்றும் காணலாம். இதற்கு நேர் வடக்கே அம்ரு பாசறை அமைத்துத் தங்கினுர். இங்கேயே அல்-புஸ்தாத் (கூடாரம்) என்ற நகரையும் தோற்றுவித்தார்.

இக்கோட்டைக்கு வடக்கேயே பின்னர் வந்த ஆட்சியாளர்கள் புஸ்தாத்தின் நிர்வாகக் கேந்திரங்களை மேலும் மேலும் நிறுவினர். இதற்கு முன்னர் நீல நதியின் மேற்குக் கரையி

Photo © Paul Almasy, Paris

லிருந்த மெம்பிஸ் தான் முக்கிய நகரர்க விளங்கிற்று; நீல நதியின் கீழ்க் கரையில் உருவான கெய்ரோ மெம்பிஸ் வகித்து வந்த சிறப்பை ஈர்த்துக் கொண்டது. புஸ்தாத்துக்கு வட கிழக்கில் ஒன்பதாம் நூற்ருண்டில் அஹ்மதுப்னு தூலூன்—அவர் கட்டிய பெரும் பள்ளிவாயில் இன்றும் உளது. அல்—கதாய் என்ற தம் தலைநகரை நிர்மாணித்தார்.

முஹம்மது நபிபெருமாஞரின் திருமகளார் பாத்திமா அவர்களின் சந்ததியினராக உரிமை கொண்டாடிய பாத்திமீ (ஷீயா) வம்சத்தினரின் காலத்திலிருந்து தான், இந்நகர் கெய்ரோ என்று பரவலாகப் பெயர் பெற்றது. அதன் கீர்த்தியும் அப்பொழுது தான் ஒளிவீசலாயிற்று. பாத்திமீ வம்சத்தின் முதல் கலீபாவான உபையதுல்லாஹ் அல்—மஹ்தீயின் ஆட்சி, துனீஷியாவிலுள்ள கைரவானில் 910ஆம் ஆண்டில் துவங்கிற்று. இதற்கு அரை நூற்ருண்டுக்குப் பின்னர், பாத்திமீ கலீபா முயிஸ்ஸின் ஆட்சியின் போது, அவருடைய அமைச்சரும், முதற் பெரும் படைத் தலைவருமான ஜவ்ஹர் எகிப்தை வெற்றி கொண்டார். இங்கு ஜவ்ஹர் நிறுவிய இடத்திலேயே பாத்திமீப் பேரரசின் தலைநகராக, அல்—காஹிரா அமையப் பெற்றது; இதுவே ஆங்கிலத்தில் கெய்ரோவாக மருவிற்று.

ஒரு இலட்சம் ஆட்களுடனும், போதிய இராணுவ தளவாடங்களுடனும், தேவைப் பொருட்களுடனும் கைரவானை விட்டு பிப்ரவரி 969இல் புறப்பட்ட ஜவ்ஹருக்கு ஜூலை 9ஆம் தேதியே புஸ்தாத் அடிபணிந்தது; அதன் வடக்கிலிருந்த மணற்பாங்கான வெளிகளில் பாத்திமீப் படை பாடி வீடமைத்துத் தங்கிற்று. அன்றிரவே கோட்டையுடன் கூடிய ஒரு புதிய மாளிகை நகருக்காக, ஒவ்வொரு பக்கமும் 1200 கஜம் அளவுள்ள ஒரு சதுக்கம் ஒதுக்கப்பட்டது. இதன் தென்புறம் புஸ்தாத்தை நோக்கியிருந்தது; மேற்குப்புறம் அல் கலீஜீ என்ற ஒரு புராதன கால்வாயை ஒட்டி நின்றது; கிழக்கே முகத்தம் குன்றுகள்; வடக்கில் பரந்த நிலப்பரப்பும், ஆசியாவுக்குச் செல்லும் பெரும்பாட்டையும் பின்னிக் கிடந்தன.

இதன் தொடக்கச் சுவர்களும், ஏழு தலைவாயில்களும் களிமண் செங்கற்களாலானவை. ஆனுல் இன்று எஞ்சி நிற்கும் கல்லாலான மூன்று சீரார்ந்த நுழைவாயில்களும், சுவரின் ஒரு பகுதியும், புகழ்மிக்க அமைச்சர் பத்ருல் ஜமாலியால் நூற்ருண்டுகளுக்குப் பின்

னர் மாறுபட்ட அமைப்பில் திட்டமிடப்பட்டவை.

அரசாங்க அலுவல்கள் காரணமாக வருவோர் தவிர வேறெவரும் நுழைய அனுமதியில்லாத ஒரு பேரரசுப் பட்டணமாகவேயிருந்தத்து அல்-காஹிரா. சுற்றிலும் சுவர்களால் சூழப்பெற்றிருந்த இப்பெரு நகர், கலீபாவுக்கும் அவர் குடும்பத்தினருக்கும் இரு மாளிகைகள், அரசாங்க அலுவலகங்கள், கோட்டைக் காவற்படையினருக்குக் குடியிருப்புகள்; கருவூல மனை (கஜானா); படைக்கலச் சாலை, குதிரைத் தொழுவங்கள்இன்ன பிறவும் இடம் பெறும் முறையில் அமைந்திருந்தது.

நகரைச் சுற்றிச் சுவர்கள் எழத் துவங்கியதும், ஒரு பெரும் ஜாமிஆப் பள்ளி நிர்மாணிக்கும் பணி ஜவ்ஹரை ஈர்த்தது. 970 ஆண்டில் ஏப்ரல் மூன்றாம் தேதியன்று, இன்றும் இஸ்லாத்தின் பேரணியாகத் திகழும் ''அல்-அஸ்ஹர்'' (ஒளிவீசுவது) பள்ளியின் அடித்தளம் இடப்பட்டது; 972 ஜூன் திங்கள் 24ஆம் தேதி இது நிறைவு பெற்றது. 988ஆம் ஆண்டிலிருந்து இது அறிஞர்களின் வசதிக்காகச் சிறப்பாகப் பயன்படுத்தலாயிற்று. அப்பொழுதிருந்து இன்று வரையும்—அது இஸ்லாத்தின் முக்கிய பல்கலைக் கழகங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது.

இன்று போல் அன்றும் இஸ்லாமிய உலகின் எல்லாத் திசைகளிலுமிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து குழுமினர். திருக்குர்ஆன், பிக்ஹு என்னும் மதவியல், ஹதீது என்னும் நபிகள் பெருமானாரின் நல்லுரைகள், சட்டம், இலக்கணம், தருக்கவியல், அணியிலக்கணம் போன்ற பல்வேறு துறைகளில் மேதகு பேராசிரியர்களிடமிருந்து நேரடியாக இம்மாணவர்கள் பாடங் கேட்டனர். ஸலாஹுத்தீனுக்கு (ஸாலடீனுக்கு)ப் பிறகு இது சிறப்பு வாய்ந்த மரபு மாறா சமயாசாரக் கல்வி நிலையமாகவும், அனைத்துலகப் புகழும், இணையற்ற கீர்த்தியும் ஒருங்கமைந்த பல்கலைக் கழகமாகவும் புகழ் பெற்றது.

கெய்ரோ நகர் நிர்மாணிக்கப்பட்ட சில ஆண்டுகளுக்குள்ளேயே, அது எத்தகைய சீரும், பேரும் எய்திற்றென்றால், 985ஆம் ஆண்டில், அரபு நாட்டுப் பயணி மக்ஸிதீ:

> ''முற்காலத்தில் பக்தாது பெரும் நகரமாக விளங்கிற்று; ஆனால் இன்று அதன் சிறப்பு அகன்றுவிட்

13ஆம் நூற்றாண்டில் சுல்தானின் விளம்பரம்

எகிப்து 13ஆம் நூற்றாண்டில் மம்லூக் மன்னர்களது ஆட்சியில் பிற நாடுகளுடன் உறவையும் வாணிகத்தையும் வளர்த்தது. மத்திய தரைக்கடல் பகுதிகளுக்கும் கீழ்நாடுகளுக்குமிடையே நடைபெற்ற வாணிகத்தின் விளைவாக கெய்ரோ உலகின் செல்வ நகர்களில் ஒன்றாகியது.

சுல்தான் கலெளன் (1278–1290) அயல் நாட்டுப் பயணிகளையும் வணிகரையும் மதிப்புடன் நடத்த வேண்டுமெனவும் இன்னும் சில நாள் தங்கிச் செல்லுமாறு அவர்களை அன்புடன் தூண்டவேண்டுமெனவும் துறைமுக அதிகாரிகளுக்கு ஆணையிட்டதாக அக்கால ஏடுகள் கூறுகின்றன. ''அவர்கள் (பயணிகளும் வணிகரும்) நமது துறைமுக வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக கடல் அளித்த கொடைகளாவர். அவர்கள் நம்மைப் பற்றி சொல்வதைப் பிறர் நீண்ட நாள் நினைப்பர். நாம் அவர்களுக்குச் செய்யும் நற்செயல்கள் (விளைநிலத்தில் விழும் விதைபோல்) நற்பயனளிக்கும். அதை அவர்களுடைய கப்பல்கள் சிறகு விரித்துச் செல்லும் பறவைகள்போல் பாய் விரித்துப் பல நாடுகளிலும் பரப்பும்'' என்று அவ்வாணை கூறியது.

சுல்தான் கலெளன் எகிப்திய வாணிகத்தைப் பெரிதும் வளர்த்தார். அதற்காக அவர் வணிகர்கள் எகிப்து, சிரியா வழியாக இந்தியா வரை பாதுகாப்புடன் செல்வதற்காக கடவுச் சீட்டுகள் வழங்கினார்.

பிற எகிப்திய சுல்தான்கள் கீழ், மேல் நாடுகளின் வணிகர்களுக்குச் செய்திகள் அனுப்பி எகிப்துக்கு வருமாறு விளம்பரம் செய்தனர். ''நமது நாட்டுக்கு வரவிரும்புவர் தம்மைக் கடவுளின் கொடைகளைப் பெறப் போகின்றவராகக் கருதட்டும். இங்கு வருபவர் இன்பம் துய்க்கும் பொருள்களைக் கொண்டுவரத் தேவையில்லை. ஏனெனில் அவர் இங்கு இன்ப உலகாகிய ஏதேன் தோட்டத்தையே காண்பார். தமது சொந்த நாட்டிலிருந்து வந்த அவர் இங்கு எல்லா வகை இன்பமும் பெறுவார். நமது ஆணையைப் பார்த்த ஏமன், இந்தியா, சீனா நாடுகளின் வணிகர்கள் நமது நாட்டுக்குப் புறப்படட்டும். நாம் கூறியதை விட மிகுதியான இன்பம் இங்குள்ளதை அவர்கள் காண்பர்'' என ஒரு வாசகம் கூறுகின்றது.



டது; நகரும் தேய்ந்து வருகிறது. அந்நகரில் நான் இன்பமெதுவும் எய்தவில்லை; போற்றுதற்கும் அங்கு எதுவுமில்லை. பக்தாதின் புகழ் உச்சத்தில் இருந்தது போன்று, இன்று கெய்ரோ விளங்குகிறது. அதைவிட வேறு மேன்மையுடைய நகர் எதுவும் இஸ்லாமிய உலகில் இல்லை.''

என்று எழுதியுள்ளார்.

ஏனெனில் அப்பாஸீய கலீபாவினுல் நியமிக்கப்பெற்ற கவர்னர் ஒருவரின் சாதாரண இருப்பிடம் என்ற நிலையிலிருந்து அப்பாஸீயாக்களின் பேரரசை மீகைக்கக் கூடியதும், மத்தியதரைக் கடலில் கிழக்கும் மேற்கும் இருந்த தன் எதிரிகளை எதிர்த்து நிற்கக் கூடிய உள்ளுரம் பெற்றதுமான ஒரு வல்லரசின் தலைநகரமாக அது வளர்ச்சியடைந்து விட்டது.

பாத்திமீகளின் கடற்படை வலிவும், அவர்களுக்கிருந்த பரந்த நேச உறவுகளும், அப்பகுதியின் ஆதிக்கப்போட்டி அரசியலில், அவர்களுக்கு ஒரு தனியிடத்தைப் பெற்றுக் கொடுத்தன. இதுவும், பாத்திமீகளுடைய அரசியல் கொள்கைகளின் விவேகமும், கெய்ரோவை முன்பென்றும், கண்டிராத ஓர் உன்னத வாணிப கேந்திரமாக உயர்த்தின.

அதன் வளமையையும், சிறப்பையும் வர்ணிக்க வார்த்தைகளேயில்லையே என்று வருந்தியுள்ளனர் நூலாசிரியர்களும், யாத்திரீகர்களும். அன்றைய கெய்ரோவுடைய சிறப்பின் உச்சி அதன் இரு அரச மாளிகைகளாகும். இவை இரண்டுக்குமிடையேயிருந்த ஒரு பெருஞ் சதுக்கம்தான் பைனுல் கஸ்ரைன் (இரு கோட்டை மாளிகைகள் இடையே) — பிற்காலத்தில், எழுந்த எழில்மிகு பள்ளிவாயில்களால் சூழப்பெற்று, இன்றும் ஒரு பெரு வீதியாக விளங்குகிறது இச்சதுக்கம். இச்சதுக்கம் அணிவகுப்புக்களுக்கும், பெரும் விழாக்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. இதன் கிழக்கிலும், மேற்கிலும் கலீபா முயிஸ்ஸும் அவருடைய மகன் அஸீஸும் கட்டிய மாளிகைகளும் பிந்தியதையடுத்து காபூர் பூங்காவும் இருந்தன.

நாலாயிரம் அறைகள்; பொன் மன்றம்; அலங்காரமான பணியாட்களால் சூழப் பெற்று கலீபா வீற்றிருக்கும் அரியணையையுடைய ஒளி



Photos © Paul Almasy, Paris

இடப்புறம்: 1889இல் கெய்ரோ தெருவின் படம். வலப்புறம் அந்நகரின் சந்தைப் பகுதியில் இன்றுள்ள தெரு காட்சி. இன்று கெய்ரோவில் பல வானளாவிய தற்கால கட்டடங்கள் இருப்பினும், கடைகளின் முன்னுல் மக்கள் குழுமியிருக்கும் குறுகிய வளைந்த தெருக்களுள்ள பழைய பகுதிகளில் யாதொரு மாற்றமும் இன்னும் ஏற்படவில்லை. மம்லூக்கஸ் காலத்தில் (கி. பி. 13-15ஆம் நூற்றுண்டுகளில்) கெய்ரோ பல நாட்டவர் கூடும் வணிக நகராக மாறியது. அப்போது அது செல்வமும் மக்கள் தொகையும் மிகுந்த இஸ்லாமிய நகராகத் திகழ்ந்தது. அதன் அங்காடிகளில் பல நாட்டுப் பொருள்கள் விற்கப்பட்டன. இன்னும் அங்காடிகளில் கமழும் நறுமணம் அரேபியாவிலும் இந்தியாவிலிருந்து வந்த வாசனைப் பொருள் வணிகத்தினுல் கெய்ரோவின் செல்வம் வளர்ந்த அன்றைய நிலையை நினைப்பூட்டுகிறது.



Photo © Rene Burri - Magnum

முஸ்லிம் கட்டடக் கலையின் பொற்காலம்

வண்ணமார்ந்த விதான மண்டபம்; பளிங்குத் தூண்களாலான மரகத மன்றம்; பிரதி ஞாயிறு, வியாழக் கிழமைகளில் அரசு மரியாதைகளுடன் கலீபா வீற்றிருக்கும் தூபி மாட அரச்வை மன்றம் ஆகியவற்றைக் கொண்ட இவ்விரு அரச மாளிகைகளையும் பற்றி இருநூறு பக்கங்களில் வர்ணிக்கிறார் மக்ரீஸீ (மறைவு 1441) என்ற எகிப்திய நிலநூலாளர்.

பாத்திமீகளின் அல்-காஹிரா உண்மையிலேயே ஒரு புது நகரம்தான். ''ரோமாபுரியை மண் நகரமாகக் கண்டோம்; அதைக் கல் மாளிகையாக மாற்றிப் படைத்தோம்,'' என்ற பேரரசர் அகஸ்டஸின் பெருமிதத்தை பாத்திமீகளும் எதிரொலிக்கலாம்.

முன்னர் குறித்தது போல பத்ருல் ஜமாலீ, 1087க்கும் 1091க்குமிடையே கெய்ரோவின் சுவர்கள், அதன் நுழைவாயில்கள் ஆகியவற்றின் பகுதிகளைப் புதுப்பித்துக் கட்டினார். இவை பேரழகு வாய்ந்த கல் வேலையாகும். முகத்தமிலிருக்கும் ஜமாலீயின் கல்லறையோடு இணைந்த பள்ளியும், அல்-அக்மாரின் பள்ளியும் கல்லாலானவையே. ஜமாலீ பள்ளியின் மினாராக்கள் எகிப்திய இஸ்லாமியக் கட்டடக் கலையில் ஒரு புதுமையாகும்.

பாத்திமீயிடமிருந்து அரசுரிமை பெற்று 1169லிருந்து 1193 வரை ஆட்சி செய்த ஸலாஹுத்தீன் ஐயூபீ (ஸாலடீன்) காலத்தில் கெய்ரோ தன் நகர அமைப்பில் முக்கிய மாறுதலையடைந்தது; அல் — காஹிராவையும் புஸ்தாத்தையும் இணைத்து முன்னிருந்ததைவிட, பத்து மடங்கு பெரிதாக்க பாத்திமீத் தலைநகரை மாற்றியமைக்கும் திட்டத்தை அவர் வகுத்தார்.

இன்றும் கெய்ரோ கட்டடக் கலையின் முக்கிய அம்சமாக விளங்கும் நகர்அரணையும் ஸலாஹுத்தீன் நிர்மாணித்தார். முகத்தம் குன்றின் அடியிலே அமைந்த இந்நகர அரணுக்கு அரசாங்கத்தின் மத்திய இருப்பிடம் மாற்றப்பட்டது. பாத்திம் நகரிலிருந்து அரசாங்க அச்சு நகர்ந்ததும், அதன் பண்டைய மாளிகைகள் சிதையலாயின. புதுப் புதுக் கட்டடங்கள் அங்கு தோன்றின இப்பொழுது அங்கு எஞ்சியிருப்பவையெல்லாம் மரச்செதுக்கு வேலையின் சிற்சில சின்னங்களேயாகும்.

எகிப்தில் 1250 வரை ஆட்சி செய்த ஸலாஹுத்தீனும் அவருக்குப் பின் வந்தோரும், இஸ்லாமியக் கட்டடக் கலையில் இன்னும் பல மாறுதல்களைத் தோற்றுவித்தனர். பள்ளிவாயிலும் பள்ளிக் கூடமும் இணைந்த மதரஸாக்கள் தோன்றலாயின. ஊசிமுனை மினாராக்களும், மோட்டிலிருந்து ஊசி வடிவாகக் கீழ் நோக்கி வரும் வேலைப்பாடுகளும், உள் வளைவுக் கட்டுமானங்களும், வெளிப்புறச் சிறப்பணிகளைக்கொண்ட குவிமாடங்களும் தோன்றலாயின.

உதுமான் அலீத் துருக்கியர்கள் 1517இல் கெய்ரோவைக் கைப்பற்றும் வரை மம்லூக் வம்சம் தொடர்ந்து ஆட்சி செய்தது. இக்கால கட்டத்தின் வாணிபச் செழிப்பு, கெய்ரோ மேலும் விரிவடைய வழி செய்தது. இதன் வடக்கு வாயில்களுக்கப்பால், ஒரு புது புறநகர்ப் பகுதி வளரலாயிற்று. கல்லறையும் பள்ளிவாயிலும்

Photo © Abdel Fattah Eid, Cairo

கி. பி. 879இல் அகமது இபன் குலூன் கட்டிய கெய்ரோவின் மிகத் தொன்மையான மசூதி அன்றிருந்தது போலவே இன்றும் சுருள் வடிவான தூபியுடனும், செங்கல் தூண்களுடனும் மரபான வேலைப்பாடுகளுடனும் விளங்குகின்றது. (இடப்புறம்) பின்னணியில் 12ஆம் நூற்றாண்டில் சாலடின் கட்டிய மாபெரும் கோட்டை காணப்படுகிறது. அதைக் கட்டும்போது சாலடின் இறந்து விடவே அவர் சகோதரர் சுல்தான் எல் ஆடெல் அதைக் கட்டி முடித்தார். நைல் மட்டத்திற்குப் பாறையில் தோண்டப்பட்டுள்ள "சூசை கிணற்றி"லிருந்து கோட்டைக்கு நீர் கொண்டு போகப்பட்டது. கோட்டையில் புகழ்மிகு முகமது அலி மசூதியின் கவிகை மாடங்களும் தூபிகளும் உயர்ந்து தோன்றுகின்றன. இஃது ஆட்டமான் காலத்திலிருந்து இலங்கும் மாபெரும் எழில்மிகு மசூதியாகும். இடக்கோடி: இபன் தூலூன் மசூதியின் முற்றம் தூபியிலிருந்து காணப்படும் தோற்றம்.

ஒருங்கிணைந்த அமைப்புக்கள், மதரஸாக்கள், பயணிகள் விடுதி, பொதுக் குடி தண்ணீர்த் தாரைகள் ஆகியவற்றின் பல சின்னங்கள் மம்லூக்குகள் காலத்திலிருந்து இன்று எஞ்சியுள்ளன.

கெய்ரோக் கட்டடக் கலையின் அழியாக் கவர்ச்சி உண்மையில் மம்லூக்குகளால் உண்டானதுதான். ஆனால் பிஷ்தாக் அரண்மனையின் பெருஞ் சுவர்களிலிருந்து சில பகுதிகள்; சுல்தான் ஹஸனுடைய கம்பீரமான பள்ளிவாயிலையடுத்த யஷ்பெக் மாளிகையின் அழகார்ந்த நுழைவாயில், பைத்துல் காஜி என்றறியப்படும் அமீர் மன்றம் ஆகியவை தவிர மம்லூக்குகளின் எழில் மிக்க கட்டடங்களில் எதுவும் எஞ்சி நிற்கவில்லை. யாத்ரீகர்கள் விட்டுச் சென்ற வர்ணனைகளும், நம் அரும்பொருட் காட்சிமனைகளை அணி செய்யும் அபூர்வப் பொருள்களும் தாம் அவற்றின் அழகையும் ஏற்றத்தையும் பற்றி ஒரு சிறிது நமக்கு உணர்த்துகின்றன. பாய்களும், மரச் சட்டங்களும் நிழல் தரும் அங்காடிகள்; தெருக்களையும் முற்றங்களையும் அலங்கரிக்கும் 'முஷ்ரபிய்யா' பின்னல் வேலைப்பாடுகள் போன்றவற்றில் சில இன்றும் நமக்குக் காட்சி தருகின்றன. அக்காலத்தில் சுறுசுறுப்பான வீதிகள், அங்காடிகள், உலகு சந்திக்கும் பயண விடுதிகள், பணத்தால் பெறப்படும் அனைத்து வசதிகளையும் தன்னகத்தே கொண்ட அரண்மனைகள், மாடமாளிகைகள், பொதுக் குளியலறைகள், பலவித நறுமலர்த் தோட்டங்கள்; கேளிக்கை மன்றங்கள், நிலா மேடைகள், வேனில் மாடங்கள் இன்னோரன்ன பிற மக்ரிஸீயின் ஏடுகளிலே தான் இன்று வாழ்கின்றன.

இரண்டரை நூற்றாண்டுகளாக—மம்லூக்குகள் ஆட்சிக் கால முழுவதும் செல்வச் செழிப்பும், பேரழகும், மக்கள் தொகையும் மிக்க இஸ்லாமியப் பெரு நகராக கெய்ரோ இருந்தது. அதன் பள்ளிவாயில்களும் கட்டடங்களும், அதன் ஆட்சியாளர்களின் சுவைத்திறனுக்கும், பொது நல நோக்குக்கும் சான்று கூறுகின்றன. அதன் கட்டடக் கலையின் சிறப்பும் பல் வகை அமைப்பும், நிறைவுடைத் தன்மையும் அரியவை; அபூர்மானவை.

பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து நூற்றாண்டுகள் ஒவ்வொன்றும் தனித் தன்மை வாய்ந்த தலை சிறந்த படைப்புக்களைப் பெற்றிருக்கின்றன. சிலுவைப் போரின் இறுதிக் கட்டத்தில் வாழ்ந்த கலௌன் காலத்திலிருந்து, உதுமான் அலீ துருக்கியர்கள் ஆக்கிரமிப்பின் ஆரம்ப கட்டத்தையும், போர்த்துகீசியர் இந்தியாவுக்கும், தூர கிழக்கு நாடுகளுக்கும் வாணிப மார்க்கங்கள் போட்டிக்காகக் கிளம்பிய காலகட்டத்தையும் கண்ட கைத்-பே, அல்-குரீ ஆகியோர் காலம் நெடுகிலும் எழில் மிக்க கட்டடங்கள் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்தன. கட்டட முகப்புக்களும், மினராக்களும், உட்புறங்களும் மென்மையிலும், அபூர்வ கற்பனைத் திறனிலும் மெருகு பெற்றன.

இவற்றினூடே 1356—59இல் நிர்மாணிக்கப்பட்ட சுல்தான் ஹஸன் மதரஸா—பள்ளிவாயில் தன்னிகரற்று விளங்குகிறது. இதற்கான கற்கள் பிரமிடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டன. இதன் பாரிய, திண்மை

வாய்ந்த அமைப்பும் கூட பிரமிட்டுகள் அமைப்பின் தூண்டுதலாய் ஏற்பட்டிருக்கக் கூடும். இதன் சுவர்கள் நெடிது உயர்ந்தவை. உச்சிச் சிற்ப வேலைப்பாடுகள் இதன் பெருஞ் சிறப்பாகும். இவை மைக்கேல் ஆஞ்சலோவின் பாலெஸ்ஸோ பார்னீஸின் உச்சிச் சிற்ப வேலைப்பாடுகளின் கற்பனைக் கொத்தவை. ஒவ்வொரு பகுதியும் பேரளவு கொண்டது. இதன் அணிவாயிற் கதவு கட்டடத்தின் உயரத்துக்கு ஓங்கி நிற்கிறது. உள்முற்றம் எழில் மிக்க நான்கு வளைவுகளால் சூழப்பட்டுள்ளது. இந்த அரும்படைப்பு முழுவதையும் அதியற்புத வேலைப்பாடுகளும், இனாமல் பூச்சுள்ள கண்ணாடிகளும் அணி செய்தன. இவற்றில் சில அரப் மியூசியத்தில் உள்ளன. இதன் வெண்கலத் தகட்டாலான அழகுக் கதவு முசுய்யது பள்ளியை அலங்கரிக்கிறது.

அரபுப் பிரயாணிகளும், நூலாசிரியர்களும் இந்த அழகு நகரை 'போட்டி போட்டுக்கொண்டு வர்ணித்துள்ளனர். இஸ்லாமிய மார்க்கோ போலோ எனப் பெயர் பெற்ற இப்னு' பதூதா 1326ஆம் ஆண்டிலேயே இதனைப் பற்றிக் கவின் சிறப்போடு எழுதியுள்ளார். தம் இறுதிக்காலத்தைக் கெய்ரோவிலேயே கழித்த வரலாற்று வல்லுனர் இப்னு கல்தூன் ''அனைத்துலகத் தலைநகர்; உலகத்தின் பூங்கா; அரச குலத்தின் அரியணை; அரண்மனைகளும் மாடமாளிகைகளும், துறவி மடங்களும், கன்னிமாடங்களும், கல்வி நிலையங்களும் அணி செய்யும் பெரு நகர்; அறிவாற்றல் என்னும் விண் மீன்கள் ஒளி வீசும் சுவர்க்கம்; நீல நதி வற்றாது வாழ்வளிக்கும் நாடு'', என்று 1383ஆம் ஆண்டிலேயே வர்ணித்தார்.

இக்கால கட்டம் முழுவதிலும் கெய்ரோ தான் இஸ்லாத்தின்—இஸ்லாமியப் பண்பாட்டின்—இதயமாக இருந்தது. மங்கோலியர்கள் பக்தாதை 1258இல் கைப்பற்றி, அழித்தனர்; அதன் பிறகு அது தன் நிலைக்கு வரவேயில்லை. ஆனால் மத்திய கிழக்கில் மம்லூக்குகள் மட்டும் தான் மங்கோலியர்களின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு, ஈடு கொடுத்து, அவர்களைப் பின்தள்ளித் தோற்கடித்தனர். எகிப்தின் செழிப்புக்கு, அதன் வளமான வாழ்வுக்கு மம்லூக்குகள் தாம் காரணமாகயிருந்தனர்.

கெய்ரோவின் கைவினைஞர்களின், நுட்ப வேலைப்பாட்டுத் திறன் ஒரு புது நிலை எய்தி நிறைவடைந்திருந்தது. உலோகம், மரம், கண்ணாடி ஆகியவற்றில் அவர்கள் காட்டிய கைத்திறனை இன்னும் பள்ளி வாயில்களிலும், மியூசியங்களிலும், காணலாம். கட்டடக் கலை வல்லுநர்களும், சிற்பக் கலைஞர்களும் சேர்த்து உருவாக்கிய மினாராக்களும் நெடுமாடங்களும் வானோக்கி இசைக் கோலம் வரைந்தன. மனிதன் உருவாக்கிய நகரங்களில் பேரழகுமிக்க ஒன்றாக கெய்ரோவை அவர்களுடைய கலைத்திறன் உருவாக்கிற்று.

''மம்லூக்குகளின் நினைவு கெய்ரோ முழுவதையும் ஆட்கொண்டு நிற்கிறது—அத்துணை கலைப்பணி ஆற்றியிருக்கிறார்கள்; அத்தனை எழில்மாடங்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)

இடப்புறம்: இஸ்லாமிய புனித நகராகிய மெக்கா சென்று வீடு திரும்பிய இக்கெய்ரோ வாசி தமது யாத்திரையின் விவரங்களைப் படங்களாக சுவரில் தீட்டி மகிழ்வதை இந்த 19ஆம் நூற்றாண்டுப் படம் காட்டுகிறது. கீழேயும் வலப்புறமும்: அல்-அஸ்ஹர் பல்கலைக் கழகத்தின் இரு தோற்றங்கள்.

Photos © Faul Almasy, Paris



பேரொளி அல் - அஸ்ஹர்

கி. பி. 969-இல் கெய்ரோ தோன்றி ஓராண்டுக்குள் எகிப்திய அரசர்களான பாத்திமீ வம்சத்தினர் அல்-அஸ்ஹர் (பேரொளி) மசூதியைக் கட்டத் தொடங்கினர். இவ்வம்சத்தினர் எழுப்பிய சிறந்த கட்டிடங்களில் இது முதலாவதாகும்.

தொடக்கத்திலிருந்தே இம் மசூதியில் பாத்திமீ மதக் கருத்துகளைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்பது அவர்களது நோக்கம். ஆனால் விரைவில் கி. பி. 988இல் காலிப் அல்-அஸீஸ் அங்கு 35 மாணவருக்குக் கல்வி வழங்க வேண்டுமென ஆணையிட்டார். அவர்கள் தங்குவதற்கும் அவரது செலவில் வசதி செய்யப்பட்டது. பாத்திமீ காலிப்கள் அறிவை வளர்த்து கல்வியைப் பரப்ப பெரும் முயற்சிகள் செய்தனர். அரசரும், அமைச்சரும் செல்வரும் கொடை வழங்கியதின் விளைவாக இம் மசூதி உலகிலே மிகத் தொன்மையான இஸ்லாமிய பல்கலைக் கழகமாக முகிழ்த்தது. விரைவில் அதன் புகழும் செல்வாக்கும் வளர்ந்தோங்கியது. எகிப்து, முஸ்லிம் உலகில் உயர்ந்த நாடாக வளரவே கெய்ரோவும் பல நாட்டு அறிஞர் நாடும் மெக்காவாக மாறியது.

அன்றிலிருந்து அல்-அஸ்ஹர் இஸ்லாமிய பண்பாட்டின் மையமாக இலங்கி வந்துள்ளது. அங்கு இறையியல் வல்லுநரும், அறிஞரும் ஆசிரியரும் இறையியல், அராபிய மொழியியல், அளவையியல், இலக்கியம், கணிதம், மருத்துவம், வானவியல், சட்டம் போன்ற பிற அறிவுத் துறைகளில் விரிவுரையாற்றி வந்துள்ளனர்.

மம்லுக் வம்ச ஆட்சியின்போது (கி. பி. 13-16ஆம் நூற்றாண்டுகளில்) அல்-அஸ்ஹர் அறிவியல் கல்வியின் மையமாக உலகப் புகழ் பெற்று விளங்கியது. அதன் பிறகு போரும் பூசலும் முனைந்து கெய்ரோவின் பண்பாட்டு வாழ்வின் ஒளியை மங்கச் செய்தபோதிலும், அல்-அஸ்ஹர் மதக் கோட்பாடுகளுக்குப் புகலிடமாகவும் அராபிய மொழியின் அரணாகவும் திகழ்ந்தது 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எகிப்தின் தற்கால அறிவு இயக்கத் தலைவர்களுள் ஒருவரான ஷெய்க் முகமது அப்து, அல்-அஸ்ஹரின் கல்வி முறைகளில் மாற்றங்கள் செய்தார். அவை அப்பல்கலைக் கழகத்தின் மரபுகளை மதித்தபோதிலும், அறிவியலுக்கும் தற்கால கல்விக்குமேற்ப புதிய முறைகளைப் புகுத்தின.

அங்கு அண்மையில் நிகழ்ந்த மாற்றங்கள் அதன் ஆற்றலை வளர்த்து செல்வாக்கைப் பரப்பியது. இஸ்லாமிய, அராபியக் கலைகள் தவிர, அறிவியல், சமூகவியல், பயிர்த்தொழில், மருத்துவம், வாணிகவியல், பொறியியல், மொழிகள், ஆசிரியப் பயிற்சி போன்ற பல துறைகளிலும் இப்போது கல்வி வழங்கப் பெறுகின்றது.

அல்-அஸ்ஹரில் 1962இல் ஒரு பெண்கள் கல்லூரியும் நிறுவப்பட்டது. அதில் இன்று உலகின் பல பகுதிகளிலிருந்து வந்துள்ள 2000 மாணவியர் பயில்கின்றனர். இக்கல்லூரி வருங்காலத்தில் பெண்கள் பல்கலைக் கழகமாக வளரும். அதில் இப்போதுள்ள கல்லூரித்துறைகளான மருத்துவம், அடிப்படை அறிவியல்கள், இஸ்லாமிய அராபியக் கலைகள், சமூகவியல், மொழி, வாணிகவியல், கணக்கியல், தொழில், நிருவாக முறை, புள்ளியியல் அனைத்தும் தனித்துறைகளாக இயங்கும்.

அண்மையில் அல்-அஸ்ஹரின் மாணவர் தொகை வளர்ந்துவிட்டது; இன்று 20,000 ஆக உயர்ந்துவிட்டது. ஆகவே கெய்ரோவின் புற எல்லையில் புதிய துறைகளுக்கென கட்டிடங்களும் மாணவரும் ஆசிரியரும் தங்குவதற்காக பல்கலைக் கழக நகரொன்றும் கட்டப்பெற்றுள்ளன. ஆனால் இஸ்லாமிய கல்வி அளிக்கும் மூன்று பழைய கல்லூரிகளும் அவற்றைத் தோற்றுவித்ததும் 1000 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பெற்றதுமான மசூதியின் அருகிலே இருக்கும்.



Photo © Jean Feuillie, Paris

கெய்ரோ அரும் பொருட்காட்சி மனையின் பழம் புகழ் கருவூலங்கள்

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் திரட்டிச் சேர்த்த செல்வங்களின் குவையைக் கெய்ரோவின் அரும் பொருட்காட்சி மனைகளில் இன்று காணலாம். பண்டைய பாரவோன் மன்னர்கள் காலமுதல் திரட்டப் பெற்ற அரிய பொருள்கள் 150,000க்கு மேல் எகிப்திய பழைமைச் சின்னங்களின் காட்சி மனையில் வைக்கப்பட்டுள்ளன. ஆயிரக் கணக்கான பிற பொருள்கள் சேமக் களஞ்சியத்தில் உள்ளன. டுட்டாங்காமென் கல்லறையிலிருந்து எடுக்கப்பெற்றவை மட்டும், புகழ்மிகு சவ முகமூடி (மேலே) உட்பட 1,700 அரிய பொருள்களாகும். எகிப்திய நாகரிகத்தின் உயர் பகுதியாகிய முற்காலப் பேரரசுக்கென (கி. மு. 2900 முதல் 2300 வரை) ஒதுக்கி வைக்கப் பெற்றுள்ள அறைகளில் கைசெஹ் பிரமிடைக் கட்டிய மைக்கரினுஸ் சிலை உட்பட எண்ணற்ற சிலைகளைக் காணலாம். இடைக்காலப் பேரரசில் (கி. மு. 2100 முதல் 1750 வரை) சிற்பக் கலை புதுமலர்ச்சியடைந்தது. அதற்குப் படையல் பொருள் சுமந்து செல்லும் இச்சிலை (வலப்புறம்) சிறந்த எடுத்துக்காட்டாகும். அக்கநேட்டன் மன்னன் காலத்தில் (கி. மு. 1370 முதல் 1352 வரை) நிகழ்ந்த சமயப் புரட்சி சிற்பக் கலையை மாற்றியது பொருட்காட்சி மனையில் இக்காலத்தைச் சேர்ந்த 71 சுண்ணம்புக்கல் சிலைகளும், பண்டைய கலையின் சிறந்த படைப்பாகிய நெஃபெர்டிட்டி அரசியின் படிகக்கல் தலையும் உள்ளன. எகிப்தில் கி. மு. 332 வரை மனித நாகரிகம் எவ்வாறு வளர்ச்சியுற்றதென்பதை அறிவதற்கு எகிப்து பொருட்காட்சி மனையே உலகிலே தலைசிறந்த களஞ்சியமாகும் எகிப்திய கிறித்துவ பொருட்காட்சி மனையில் கி. பி. 5ஆம், 6ஆம் நூற்றுண்டுகளிலிருந்து திரட்டப்பெற்ற சிலைகள், கட்டிடக் கலைப்பொருள்கள், ஓவியங்கள், ஓவியத் திரைகள் ஆகியவையும் 16ஆம், 17ஆம் ஆண்டுகளின் சிலைகளும் உள்ளன. மரத்தில் வரையப்பெற்ற உயர் ஓவியம் (எதிர்பக்கம்) ஃபாயம் பகுதியில் கண்டெடுக்கப்பெற்றது. அப்பகுதியில் கி. பி. 1 முதல் 4ஆம் நூற்றுண்டு வரை கிரேக்க கலைஞர்கள் பைசாண்டிய கலைக்கு முன்னோடியான ஒரு கலை வகையை வகுத்து வந்தனர். கெய்ரோ இஸ்லாமியக் கலைப் பொருட்காட்சி மனையில் வியத்தகு முறையில் 70,000 இஸ்லாமியக் கலைப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன. அங்கு பண்டைய அராபிய, உமையாட், பாத்திமீ, மம்லூக், ஈரானிய, துருக்கிய பொருள்களான மட்பாண்டங்கள் (சில 8 நூற்றுண்டுகளுக்கு முந்தியவை), கண்ணாடிப் பொருள்கள், மணி பதிந்த போர்க் கருவிகள், கம்பளங்கள் ஆகியவற்றைக் காணலாம். ஆட்டோமன் ஊழியிலிருந்து திரட்டப்பெற்ற கலைப் பொருள்களின் முழுத் தொகுதியை காஸ்ர்-அல்-நில் பொருட்காட்சி மனையிலும், பெரும் ஐரோப்பிய ஓவியர்களான கோயா, டெலாகு ராய்க்ஸ், ரூபென்ஸ், வான்காக் ஆகியோரின் ஓவியங்களையும், முகமது செய்து, முகமது நெக்வி போன்ற எகிப்திய ஓவியர்களின் ஓவியங்களையும் மௌக்நார் பொருட்காட்சி மனையிலும் காணலாம்.



Photo © Hassia, Paris

Photo Ministry of culture, Cairo



சான் அகஸ்டின்

வரலாற்றுக்கு முற்பட்ட கொலம்பியாவில் புதைந்து கிடக்கும் புதிர்

ஃபர்னாண்டோ சான்ஜ்

பாறைகளாலான சின்னங்களும், கல் சவப் பெட்டிகளும், ஏறக் குறைய 400 சிலைகளும், 4 மீட்டருக்கும் உயரமான சில சிலைகளும் கொலம்பியாவில் தோன்றிய வரலாற்றுக்கு முற்பட்ட பண்பாட்டைக் காட்டுகின்றன. அஃது இந்நூற்றாண்டின் தொடக்கம் வரை மறைந்தேயிருந்தது.

சிகரங்களும் காடுகளும் இடையிடையே தோன்றும் மலையடுக்குத் தொடரில் கடல் மட்டத்திற்கு 1,700 மீட்டர் (5,600 அடி) உயரமுள்ள மத்திய ஆண்டிய தொடரின் கீழ் புறம் அமைந்துள்ள கிராமத்தின் பெயரால் அது ''சான் அகஸ்டின் பண்பாடு'' என அழைக்கப்படுகின்றது. இங்கே பெரும் மாக்டலினா ஆறு உற்பத்தியாகின்றது. குயின் சானா, போர்டன்ஸ் போன்ற ஆறுகளும் இங்குப் பாய்கின்றன.

சான் அகஸ்டினின் அண்மையிலும் சேய்மையிலும் கோயில்கள், மேடுகள், கல்லறைகள், சிலைகள் போன்ற சின்னங்கள் மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் பரவிக் காணப்படுகின்றன. இவை கி. பி. 1200 முதல் 1532இல் நிகழ்ந்த ஸ்பானிய வெற்றிவரை நிலவிய பெருவிய இன்கா நாகரிகத்தை விடப் பழமையானதொரு நாகரிகத்தின் சின்னங்களாகும்.

நீண்ட கால ஆய்வின் பிறகும் கூட சான் அகஸ்டின் பண்பாட்டின் தொடக்கம், கால வரிசை, பிற நாகரிகத் தொடர்பு ஆகியவை பற்றி முடிவாக ஒன்றும் கூற முடியவில்லை. பல நூறு சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள சான் அகஸ்டின் பகுதி இன்று ஒரு தேசிய ''தொல்பொருட் கலைப் பூங்கா'' வாக விளங்குகிறது. அதில் இன்னும் பல பண்டைய சின்னங்கள் புதைந்தோ காடுகளால் மூடப் பெற்றோ கிடக்கலாம்.

16ஆம் நூற்றாண்டின் நடுவில் ஸ்பானிய வெற்றி வீரர்கள் இப் பகுதியை ஆராய்ந்து இங்கு குடியேறியபோதிலும், அக்கால வரலாற்றறிஞர்களான ஃபிரே பெட்ரோ சைமன், பெட்ரோ சீஸா டி லியோன், டான் ஜுவான் டி காஸ்டலானஸ்

Photos © Michel Hetier, Paris

இயற்கைக்கு அஞ்சி கற்களுக்கும் மரங்களுக்கும் அடியில் பதுங்கியிருக்கும் உயிர்களைப் போல் தோன்றும் இச்சிலைகள் (இடப்புறமும் மேலும்) தென் கொலம்பியாவிலுள்ள ஆண்டிஸ் மலைத் தொடரிலும் காடுகளிலும் அண்மையில் கண்டெடுக்கப்பெற்ற சிலைகளுள் இரண்டாகும். இந்த ''சான் அகஸ்டின் பண்பாடு'' 2,500 ஆண்டுகளுக்கு முன் தோன்றி 15 நூற்றாண்டுகளாகத் தழைத்தோங்கியது. மரபான வடிவமும் பேரளவுமுள்ள இச்சிலைகள் பண்டைய மெக்ஸிகோ பகுதியின் ஆஸ்டெக், ஸப்போடெக் பழங்குடிகளின் சிலைகளை ஓரளவு ஒத்துள்ளன.

மஜோர்கா தீவில் மறந்து விடப்

கொலம்பியாவின் சான் அகஸ்டின் பகுதியிலுள்ள சிலைகள் பலவற்றின் தோளில் மற்றோர் உருவமும் காணப்படுகின்றது. இதன் பொருள் விளங்கவில்லையெனினும், இது மத அடையாளமாக இருக்கவேண்டுமென்பது உறுதி. இந்த இடப்புற இரட்டை உருவம் 2 மீட்டர் (6 அடிக்கு மேல்) உயரமுள்ளது.

விலங்கின் தலையாக முடியும் கற்கொடி கூரிய பற்களுடைய தெய்வத்தின் வாயிலிருந்து புறப்படுகிறது. (கீழே) சிலை ஒரு மீட்டருக்கும் குறைவான (3 அடி) உயரமுள்ளது. சான் அகஸ்டின் சிலைகள் பலவற்றில் காணப்படும் இக்கொடியின் பொருள் இன்னும் புரியவில்லை.

Photos © Michel Hetier, Paris



ஆகியோர் இச் சின்னங்களைப் பற்றி குறிப்பிடவில்லை.

1757இல் இப் பகுதிக்குச் சென்ற ஜுவான் டி சாண்டா ஜெர்ட்ரூடிஸ் எனும் ஸ்பானியத் துறவியின் குறிப்புகளில்தாம் இக் கலைக் கருவூலங்களைப்பற்றி முதன் முதலின் விவரங்கள் காணப் பெற்றன. அவர் புதைந்து கிடந்த கருவூலங்களைக் காணக் கல்லறைகளையும் மண்மேடுகளையும் ஆய்ந்துவந்த பப்பாயா நகர கத்தோலிக்க மதகுருவைக் கண்டு பேசியதாகக் குறிப்பிட்டுள்ளார். ஒருவேளை இவரும் கருவூலம் பெற விழைந்த பிறகும் தாம் இன்று நாம் கணும் சின்னங்களைத் தோண்டியிருக்கக் கூடும். ஃபிரே ஜுவான் டி சாண்டோ ஜெர்ட்ரூடிஸின் குறிப்புகள் பால்மா டி மலோர்கா மடத்தில் 200 ஆண்டுகள் கவனிப்பாரற்றுக் கிடந்து 1956இல் வெளியிடப்பெற்றன.

ஜுவான் துறவி சென்ற 40 ஆண்டுகளுக்குப் பிறகு 1797இல் கொலம்பிய அறிஞரான ஃபிரான்சிஸ்கோ ஜோஸ் டி கால்டாஸ் அங்கு சென்று அப்பகுதியின் புவியியல் பற்றி நூலொன்று எழுதினர். அதில் அப்பகுதி பற்றி சுருக்கமாக விளக்கியுள்ளார்.

19ஆம் நூற்றூண்டில் சான் அகஸ்டினுக்குச் சென்ற கொலம்பிய, பிரெஞ்சு, ஆங்கிலேய, இத்தாலிய, ஜெர்மானியப் பயணிகள் அதன் புதிரான, கவின் கற்சின்னங்களைப்பற்றி தமது குறிப்புகளில் கூறுகின்றனர். ஆயினும் 1913 முதல் 1914 வரை அப்பகுதியில் உழைத்த ஜெர்மானிய புதைபொருளாய்வாளர் கான்ரட் தியோடர் தமது ''வரலாற்றுக்கு முற்பட்ட சின்னங்களின் கலை'' எனும் நூலில் தாம் கண்டவற்றைப் பற்றி எழுதிய பிறகுதான் அதன் முழுச் சிறப்பும் தனி வளமும் தெரியவந்தன.

1935இல் கொலம்பிய கல்வி அமைச்சு பெரும் பகுதியான நிலத்தை வாங்கி, ''தொல்பொருட் கலைப் பூங்கா''வை நிறுவியது. இவ்வாறு அழிந்துபோன சின்னங்கள் அரசாங்கப் பாதுகாப்பைப் பெற்றன.

1936–37இல் கொலம்பிய புதைபொருளாய்வாளரான ஜோஸ் பீரிஸ் டி பரடாஸ் தமது நாட்டின் முதல் அகழ் வாய்வைத் தொடங்கி, 1943இல் அது வளர வெளிவராத வகையில் அப்பகுதிபற்றி விரிவான விவரங்களை வெளியிட்டார். அதன்பிறகு மற்ருெரு கொலம்பிய வல்லுநரான லூயிஸ் டியூகுவே கோமஸ் மேலும் அகழ்வாய்வுகளை நடத்தினர்.

சான் அகஸ்டின் பகுதியில் ஏறக்குறைய 30 முக்கிய புதைபொருளாய்விடங்கள் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் சில ஆல்டோ டி லவபடாஸ் (கால் கழுவும் மலை), ஆல்டோ டி லவடெராஸ் (சலவைப் பெண் மலை), லாஸ் மெசிட்டாஸ் (சிறு மேடு), ஆல்டோ டி லாஸ் ஐடலாஸ் (சிலைகளின் மலை) எனும் அரிய பெயர்கள் பெற்றுள்ளன.

ட்ட கையெழுத்துப் படி

சான் அகஸ்டின் நாகரிகம் சில வேளை 1500 ஆண்டுகளுக்கு மேலாக நிலவியிருக்கக்கூடும். பீரிஸ் டி பரடாஸ் அதை ''வட ஆண்டிய பாறைப் பண்பாடு'' எனக் குறிப்பிடுகிறார்.

அகழ்வாய்வுகள், கால ஆய்வுகள் ஆகியவற்றில் கிடைத்த சான்றுகளைக் கொண்டு லூயிஸ் டியூடுவே கோமஸ் மூன்று காலப் பகுதிகளைக் குறிப்பிட்டுள்ளார். கி. மு. 555 முதல் கி. பி. 425 வரை நிலவிய முதல் பகுதியில் பக்க் அறைகளுள்ள சாய் குழிக் கல்லறைகள், மரச் சவப் பெட்டி, மரச் சிற்பம், முற்கால தங்க வேலை, செதுக்கல், வண்ண வேலைப்பாடுள்ள மட்கலங்கள், கிண்ணங்கள், மர உரி, சோளம், கிழங்கு விளைச்சல் போன்ற இயல்புகள் காணப்பட்டன.

நடுப்பகுதி கி. பி. 425 முதல் 1180 வரை நிலவியதென்றும், புதை கலங்கள் புதை மேடுகள், ஒரே கல்லாலான சவப்பெட்டிகள், பிணம் எரித்தல், சிற்பக் கலை அதன் தனிச் சிறப்புகளாய் அமைந்தன என்றும் டியூகுவே கருதுகிறார்.

மூன்றாவது இறுதிப் பகுதி 12ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. அஃது எப்போது முடிவுற்றதெனத் திட்டமாகக் கூற முடியவில்லை. உயிருள்ள கற் சிற்பம், வட்ட வடிவான வீடுகள், நெசவுத் தொழில் ஆகியவை அதன் தனி இயல்புகளாகும்.

வட ஆண்டிஸ் பகுதியில் நிலவிய சான் அகஸ்டின் நாகரிகம் பெருவில் வளர்ந்த சாவின் நாகரிகத்துடனும், இன்னும் தெற்கே பொலிவியாவில் தழைத்த டியாஹூவானக்கோ நாகரிகத்துடனும் தொடர்பு கொண்டிருந்ததென வல்லுநர் சிலர் கருதுகின்றனர்.

ஆண்டிஸ் நாகரிக வளர்ச்சியில் மத்திய அமெரிக்கா முக்கிய பங்கு பெற்றிருக்கக் கூடுமென சில வல்லுநர்கள் நம்புகின்றனர். ஆல்பெக் நாட்டில் (வெராகுருஸ், உபாஸ்கோ, ஒக்சாக்கா ஆகிய மெக்சிக்கோ நாடுகளின் பகுதியில்) நிலவிய மெசோ அமெரிக்க நாகரிகத்தினின்று பெரு நாட்டின் சாவின் பண்பாடு தோன்றியிருக்குமென்பதற்கு அண்மையில் சான்றுகள் பல கிடைத்துள்ளன.

மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த பண்டைய கப்பலோட்டிகள் தென் அமெரிக்காவின் வட கரைகளையொட்டிச் சென்றபோது பெரு நாட்டில் சிறுத்தை வழிபாட்டையும் அதனுடன் தொடர்புடைய கலைப் பண்பையும் சோளப் பயிரையும் புகுத்தினர். கி. மு. 9ஆம் நூற்றாண்டிலிருந்தே இத் தொடர்புகள் தொடங்கின. எனலாம். சிறுத்தை வழிபாடு இப்போது கொலம்பியா எனப்படும் பகுதியிலும் பரவி கி.மு. 500இல் சான் அகஸ்டினை அடைந்திருக்கக்கூடும். ஆனால் பண்பாடானது மத்திய அமெரிக்காவிலிருந்து மட்டும் ஒரு முகமாகத் தெற்கு



Photos © Michel Hetier, Paris

மேலே: 2 மீட்டர் (6 அடிக்கு மேல்) உயரமும் $1\frac{1}{2}$ மீட்டர் (ஏறக்குறைய 5 அடி) அகலமுள்ள இப் பெரிய சிலை இரு கைகளிலும் செங்கோல் வைத்திருக்கும் செங்கதிர்க் கடவுளின் சிலையாகும். இது கி. பி. 4 முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை நீடித்திருந்த சான் அகஸ்டினின் கொலம்பிய பண்பாட்டின் தொன்மைக் காலம் எனப்படும் காலத்தில் செய்யப்பட்டது. வடிவியல் உருவுடைய மகுடம் பெரு நாட்டின் சான்சான் சுவரோவிய மகுடங்களை ஓரளவு ஒத்துள்ளது. பெருவின் கிமு பண்பாட்டிற்கும் கொலம்பியாவின் சான் அகஸ்டின் பண்பாட்டிற்கும் தொடர்பு இருந்திருக்கலாமென்பதை இது காட்டுகிறது. வலப்புறம்: பாம்பை விழுங்கும் கழுகு.

1

2

3

Photo © Michel Hetter, Paris

நோக்கிய பரவவில்லை; அது பெருவியப் பண்பாட்டிலிருந்து வடக்கு நோக்கி கொலம்பியாவினுள்ளும் பரவியது.

சான் அகஸ்டின் பண்பாட்டின் அடிப்படை இயல்புகளை மூன்று வகையாகப் பகுக்கலாம். புதைபொருளாய்வாளரான கான்ரட் கருத்துப்படி அவற்றை (1) பெரும் கற் சின்னங்கள், எண்ணற்ற சிலைகள், கல்லறைகளில் காணப்படும் மிகுந்த எடையுள்ள கல் சவப்பெட்டிகள்; (2) பெரிய வாயும் நீண்ட கூரிய பற்களுமுடைய கல் செதுக்குருவங்கள், அருகில் பதுங்கி நிற்கும் உருவமுள்ள சிலைகள்; (3) சிலைகளின் வாயினின்று வெளிவரும் கற்கதிர்கள், அவை ஒவ்வொன்றின் முனையில் சிறு தலை எனப் பகுக்கலாம்.

பெரிய கற்களால் கட்டப்பெற்ற கோயில்களும் கல்லறைகளும் சான் அகஸ்டினின் கட்டடக் கலைச் சின்னங்களாகும். தரையில் செங்குத்தாக நிற்கும் கோயில் சுவர்கள் ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் காணப்படும் வரலாற்றுக்கு முந்திய காலக் கல்லறைப் படிவங்களை அல்லது கல்மேடைகளை நினைவூட்டுகின்றன.

கட்டடச் சிற்பங்களும், சிறப்பாக பலவகை அரிய நுணுக்கங்கள் அமைந்த சிலைகளும் சான் அகஸ்டின் பண்பாட்டின் தலைசிறந்த கலை வடிவங்களாகும். அவை 40 செ. மீ. முதல் 4 மீட்டர் வரை (15 அங். முதல் 13 அடி வரை) உயரமுள்ளவை. அவற்றின் வடிவங்களும் கலைப் பண்புகளும் அவை படிப்படியாக நீண்ட காலமாக வளர்ச்சியுற்றவை என்பதைக் காட்டுகின்றன.

பீரிஸ் டி பரடானின் கருத்துப்படி, சில உருவங்கள் இயல்பாகத் தோன்றிய போதிலும், பெரும்பாலும் மதமும் மாய வித்தைகளுமே சான் அகஸ்டின் சிற்பக்கலை வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தன. மெக்ஸிக்கோவிலுள்ள சப்போட்டகாஸ் உருவங்களைப் போல் ''சில

4

புதை பொருள் பூங்காவில் கடவுளரும் மனிதரும்

இவ்விரு பாகங்களிலுமுள்ள படங்கள் சான் அகஸ்டின் பண்பாட்டைச் சேர்ந்த பல வகை சிலைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இப்போது ‘‘புதைபொருள் பூங்கா’’ என ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள தென் கொலம்பிய காட்டுப் பகுதியில் இவை படமெடுக்கப்பட்டன. படம் 2இல் தொப்பி அணிந்ததுபோல் காணப்படும் கடவுளின் உருவம் புதுமையாக இருக்கின்றது. படம் 4 குழலோன் உருவம். கீழே அரை மனிதன் அரை விலங்கு உருவம்.

Photos © Michel Hetier, Paris

சான் அகஸ்டின் சிலைகள் மரபொழுங்குடனும் உருத்திரிபுகளுடனும் காணப்பெற்ற போதிலும், அவற்றைச் செய்த சிற்பிகளுக்கு உடல் உறுப்புகளின் அமைப்பு நன்கு தெரிந்திருந்தது என்பது தெளிவாகின்றது’’.

மெக்ஸிகோவின் ஆஸ்டெக் கலைஞர்களைப் போலவே சான் அகஸ்டின் கலைஞர்களும் ஒழுங்கு முறைகளுக்குட்பட்டே கலைப் பணியாற்றினர். ஆகவே சிலைகளில் தலைக்கும் உடலுக்கும் இயைபுப் பொருத்தமில்லாதிருப்பதும், அவற்றின் விசித்திர வடிவங்களும் தோற்றங்களும் தற்செயலாக ஏற்பட்டவையல்ல. அவை கவர்ச்சிகரமாக அமைந்துள்ளன. குறிப்பாக 2 மீட்டர் (8 அடி) உயரமுள்ள புகழ்மிகு முக்கோணத் தலை போன்ற சின்னங்களில் இவ்வியல்பைக் காணலாம்.

பொதுவாக தலைகள் இயைபுப் பொருத்தமின்றி பெரிதாகவும் உடல் தடித்துக் குட்டையாகவும், உறுப்புகள் சிறுத்து விறைத்தும் காணப்படுகின்றன. முகம் நுணுக்கமாகச் செய்யப் பட்டுள்ளது. பொதுவாக அதில் மிகப் பெரிய வாயும் நீண்ட கூரிய பற்களும் அமைந்துள்ளன. பாதி மனித உருவமும் பாதிப் பூனை இன உருவமுமுள்ள சிலைகள் ஆரமும் கைவளையும் அணிந்துள்ளன. சில தண்டு அல்லது செங்கோல் வைத்துள்ளன; மற்றவை வெற்றிச் சின்னம் அல்லது குறுந்தடி வைத்துள்ளன.

பலவற்றில் நாக்கு வெளியே நீண்டுள்ளது. இதைப் பசிபிக் தீவுப் பண்பாடுகளிலும், சீனாவிலும் தென் கிழக்கு ஆசியாவிலும், வடகிழக்கு கனடாவின் இந்திய சிற்பங்களிலும் காணலாம்.

சான் அகஸ்டின் பண்பாட்டில் பல முக்கிய விவரங்கள் அழிந்துவிட்டபடியால், அதன் மத அடையாளங்களின் பொருள் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

தமிழில் : வள்ளுவன் கிளாரன்சு

யூகோஸ்லாவ்-ருமேனிய எல்லையில் டான்யூப் நதிக்கரையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்த ஒரு கிராமத்தின் பழம் பகுதி. இதுவரை ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட குடியிருப்புகளில் இது மிகத் தொன்மையானது. யூகோஸ்லாவிய தொல் பொருளாய்வாளர்கள் புதியதொரு அணைக்கட்டினால் நீர் நிரம்பவேண்டிய பகுதியைத் தோண்டும்போது இதைக் கண்டுபிடித்தனர். அதன் எதிரே ஆற்றின் அருகில் டிரஸ்க்வாக் மலை உள்ளது. ருமேனிய கரையில் அதன் வறண்ட வெறுமையான நாற்கட்ட வடிவம் காட்சியளிக்கின்றது. வீடுகளின் அடித்தளங்களும் (முன்னணியில்) இதே நாற்கட்ட வடிவத்தில் அமைந்துள்ளன. ஆகவே லெப்பென்ஸ்கி வீர் கிராம மக்கள் மலையின் வடிவத்திலிருந்து தமது கட்டடக்கலையையும் வகுத்தனர் எனத் தொல்பொருளாய்வாளர் கருதுகின்றனர்.



ஜீன் வைடல்

ஐரோப்பாக் கண்டத்தின் சமீபக் காலத்திய புதை பொருள் ஆராய்ச்சிகளில் மிகவும் பிரச்னைக்கு இடமாக இருப்பது 8,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குடியிருப்புகளை லெப்பென்ஸ்கி வீர் (லெப்பெனுவின் சுழல்) என்ற இடத்தில் தோண்டி எடுத்தது ஆகும். இவ்விடம் பெல்கிரேட்டிலிருந்து 175 மைல் தூரத்தில் ருமேனியாவுக்கும் யுகேஸ்லேவியாவுக்கும் எல்லையாக உள்ள பகுதியில் டான்யூப் நதிக் கரையில் அமைந்துள்ளது. இந்தப் புதைபொருள் கண்டுபிடிப்புகள் மிக அதிகமான பிரச்னைக்குரிய வினாக்களை எழுப்பியுள்ளது.

இப் பகுதியில் கட்டப்போகும் புதிய அணைக்கட்டின் காரணமாக இப் பிராந்தியம் வெள்ளத்தால் மூழ்கிவிடும் என்ற காரணத்தால் புதைந்துக் கிடப்பனவற்றை தோண்டியெடுக்க முற்பட்டபொழுது இப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. டான்யூப் நதி, ‘இரும்பு வாசல்’ என்று சொல்லப்படும் இரு பெரும் மலைகளிடையே புகுந்து புறப்படும் இடத்தில் யுகோஸ்லேவியா, ருமேனியா அரசுகள் இரண்டின் கூட்டு முயற்சியால் ஜார்திப் அணை என்ற பெயருடன் கட்டப்படப்போகும் ஒரு அணைக்காக 1964இல் அடிக்கல் நாட்டிற்று. இப் பகுதியில் 1896-க்கு முன்னர் பெரும்பெரும் பாறைக் கற்கள் படகுப் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்தன. அணை முடிந்தவுடன் டான்யூப் நதியின் இரு கரைகளும் இவ்விடத்தில் பெரிய நீர்த் தேக்கம்போல் அமைந்துவிடும்.

பெல்கிரேட் பல்கலைக் கழகத்தில் தத்துவத் துறையில் சொற்பொழிவாளராய் இருக்கும் ட்ராகோஸ்லாவ் ஸ்ரோஜோவிக் என்பவர் இடைக் கற்காலத்திற்கும், புதுக் கற்காலத்திற்கும் பாலமாக அமைந்துள்ள ஒரு நாகரிகம் ‘ஸ்டார்ஸேவோ’ என்ற இப் பகுதியில் மிகப் பழங்காலத்தில் இருந்திருக்க வேண்டுமென்று நம்பினர். பால்கன் பிரதேசத்தில் கி. மு. 5,000-த்தை அடுத்து இருந்த புதுக் கற்கால நாகரிகமே ஸ்டார்ஸேவோ என்று சொல்லப்படும்.

ஜீன் வைடல் பிரெஞ்சு திரைப்படத் தயாரிப்பாளர்; பல அறிவியல் ஏடுகளில் கட்டுரைகள் எழுதுபவர்; தொல்பொருள் அகழ்வுகள் பற்றி பல தொலைக் காட்சிப் படங்கள் தயாரித்துள்ளார்.

லெப்பென்ஸ்கி வீர்

டான்யூப் ஆற்றங் கரையின் மேல் ஐரோப்பாவின் மிகப் பழங்கால குடியிருப்பு

மிக அவசரமாகப் பணியில் ஈடுபட வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டு விட்டது. நைல் நதிப் பிரதேசத்தில் நுபியன் சிலைகளை மிக அவசரமாக அப்புறப்படுத்துவதற்கு யுனெஸ்கோ முயன்றதைப் போல், மிகச் சிறிய அளவில் இங்கும் இப் பணியை தொடங்க வேண்டியிருந்தது. ஏனென்றால், அணையின் காரணமாகத் தண்ணீரின் மட்டம் மிக வேகமாக உயர்ந்துகொண்டு வந்தது.

பெல்கிரேட் தேசியப் பொருட்காட்சிசாலையைச் சேர்ந்த பேராசிரியர் லாஸர் ட்ரிபுநோலிக் என்பரின் தலைமையின்கீழ் கூடிய ஒரு தனிக் குழு டான்யூபின் கரையில் மூடி மறைந்து கிடக்கும் நாகரிகத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தும் பணியை ஸ்ரோஜோவிக்கிற்கு அளித்தது.

பல்வேறு தொடக்கப் பணிகளைச் செய்து முடித்த பிறகு 1965 ஜூலையில் பேராசிரியர் ஸ்ரோஜோவிக் 'லெப்பென்ஸ்கி வீர்' என்ற இடத்தில் தம்முடைய கூடாரத்தை அமைத்தார். இவ்விடத்தில் தண்ணீர் மிக வேகமாக சுழன்று செல்லும் நிலை இருந்தது. பன்னெடுங்காலமாகவே மனிதர்கள் 'டான்யூப்'பை நம்பி வாழ்ந்தார்கள் என்பதை அவர் அறிவார். சுழல் அடித்து ஓடும் இந்நீர்ப் பகுதியில் பழங்கால மனிதர்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் தம் வலையை விரித்து மிகப் பெரிய மீன்களை பிடித்து வந்தனர்.

இப் பகுதியில் உள்ள தண்ணீரின் சுழல் அடித்து ஓடும் வேகமே ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1958இல் ஸ்ரோஜோவிக்கின் கவனத்தை ஈர்த்தது. ஸ்டார்ஸோவோ நாகரிகத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதர்கள்கூட மீன் பிடிக்க சௌரிகயமான இடத்தில் தங்களுடைய வாழ்க்கையை அமைத்திருக்க மாட்டார்களோ என்று அவர் சிந்தித்தார்.

இந்த மாவட்டம் முழுவதிலும் மேலாக அமிழ்ந்து போயிருந்த ஸ்டார்ஸோவா நாகரிகத்தின் அடியில் என்ன நாகரிகம் அமிழ்ந்திருக்கிறது என்பதைக் காண ஒரு சிறிய குழுவுடன் ஸ்ரோஜோவிக் ஆராயத் தொடங்கினார். ஒரு நாள் அவருடைய மண்வெட்டி சிவப்பு நிறமுடையதும் திண்மைப் படைத்தது மான ஒரு பகுதியின்மேல் விழுந்தது. உடனே அப் பகுதியைச் சுற்றியிருந்த மண்ணை அப்புறப்படுத்தினார். என்றாலும் கோடக வடிவுடைய ஒரு பகுதியில் இந்த செந்நிறம் தொடர்ந்து இருந்து வந்தது. ஸ்டார்ஸேவா நாகரிகம் தோன்றுவதற்கு மூதாதையர்களாக இருந்த மக்கள் இந்த அடித்தளத்தை நிருமாணித்து இருப்பார்களோ என்ற ஐயம் தோன்றிற்று.

விரைவில் பதினொரு நாற்கர வடிவான பகுதிகள் கிடைத்தன. இவற்றின் பழமையை ஆராய நடத்தப் பெற்ற 'கார்பன்—14 சோதனை' பேராசிரியர் ஸ்ரோஜோவிக்கின் அனுமானத்தை உறுதி செய்தன. லெப்பென்ஸ்கி வீர் என்ற பகுதியின் நாகரிகம் கிருத்துவ சகாப்தத்திற்கு 60 நூற்றாண்டுகள் முற்பட்டது என்பது தெளிவாயிற்று. இதுவரையில் ஐரோப்பாவில் தோண்டியெடுக்கப்பட்ட எந்தக் குடியிருப்பும் இவ்வளவு பழமையைப் பெற்றிருக்கவில்லை.

யுகேஸ்லேவியா, ருமேனியா என்ற இரு நாடுகளின் எல்லையில் அமைந்துள்ள கிழக்கு ஸர்பியாவில்,

யூகோஸ்லாவிய அகழ்வாய்வுக் குழுவினர் ஆற்றங்கரை முழுவதும் 3 கெஜ ஆழத்திற்குத் தோண்டினர். அவர்கள் முதன் முதலில் கி. மு. 5000-லிருந்த ஒரு பண்பாட்டுக் குடியிருப்பைக் கண்டுபிடித்தனர். அதற்குக் கீழே அதைவிட முந்திய பண்பாட்டைச் சேர்ந்த வீடுகளின் அடித்தளங்களையும் கலைப்பொருள்களையும் கண்டனர். கலைப்பொருள்கள் தாம் லெப்பென்ஸ்கி வீர் அகழ்வுகளின் சிறப்பியல்பாகும் (அடுத்த பக்கங்களைப் பார்க்கவும்).

Photos © Jean Vidal, Paris

Photos © Jean Vidal, Paris

மனிதனா மீனா பொருளற்ற உருவமா ?

லெப்பென்ஸ்கி வீர் சிற்பிகள் டான்யூப் ஆற்றினால் அடித்த வரப்பெற்ற வழவழப்பான உருண்டை கற்களைப் பயன்படுத்தியபோது அவற்றின் அடிப்படை உருவத்தை மாற்றி விடவில்லை. மேலும் கீழுமுள்ள உருவங்கள் மீன்களையோ மனித தலைகளையோ, அக்காலத்திற்குச் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பனிக்கட்டி ஊழிக்குப் பிறகு ஐரோப்பாவில் வேடர்கள் எலும்புகளில் செதுக்கிய பொருளற்ற வடிவங்களையோ குறிப்பதாகப் பலர் பற்பல விளக்கங்கள் தருகின்றனர்.



லெப்பென்ஸ்கி வீர் மக்கள் மட்பாண்டக் காலத்தைச் சாராதவர்கள் அல்லது அக்காலத்திற்கு முற்பட்டவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். அங்கு காணப்பட்ட மட்பாண்டத் துண்டுகள் (மேலே) முன்னால் பால்கனின் மிகத் தொன்மையான புதிய கற்காலப் பண்பாடாகக் கருதப்பெற்ற ஸ்டார்ஸெவோ ஊழியைச் சேர்ந்தவையாக எண்ணப்படுகின்றன. ஆயினும் லெப்பென்ஸ்கி வீரில் கண்டெடுக்கப்பெற்ற மிகப் பழைமையான மட்பாண்டம் கி.மு. 5600ஐச் சேர்ந்ததெனக் கணக்கிட்டுள்ளனர். கீழே: மணற்பாறை கல்லின் செதுக்கு வேலைப்பாடுகள் வேட்டைக் காட்சியாக இருக்கலாம்.



லெப்பென்ஸ்கி வீர் என்ற இந்தச் சிறு பகுதி அமைந்துள்ளது. இப் பகுதி 170 மீட்டர் நீளமும், 50 மீட்டர் அகலமும் (560×165) கொண்ட ஒரு நாற்கரம் போல் அமைந்துள்ளது. எனவே இப் பகுதியின் மொத்தப் பரப்பளவு ஒரு சிறு குடியிருப்பின் பரப்பளவை ஒத்ததேயாகும். என்றாலும் ஒரு கண்டுபிடிப்பின் சிறப்பு, கண்டுபிடிக்கப்பட்ட இடத்தின் பரப்பளவை வைத்து மதிக்கப்பட முடியாது என்பதை நமக்குக் காட்டிற்று.

மிக அடர்த்தியான காட்டினாலும் செங்குத்தான மலைச் சரிவுகளினாலும் பாதுகாக்கப்பட்ட இவ்விடம், அமைதியான ஒரு நீண்ட பரப்பை இக் குடியிருப்புகள் தோன்றுவதற்கு அளித்த காரணத்தால் இங்குள்ளவர்கள் வெளியே செல்வதற்கு ஆற்றின் மேலே செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது. 'இரும்பு வாசல்' என்று சொல்லப்படக் கூடிய அந்த மாபெரும் பகுதியிலுள்ள சுற்றுச் சூழ்நிலைகளை வைத்து நோக்கினால் லெப்பென்ஸ்கி வீர் மிகச் சிறிய நுண்மையான ஒரு பகுதியாகும்.

இந்தக் குடியிருப்பின் எதிர்க்கரையில் அதாவது ருமேனிய நாட்டின் கரைப் பகுதியில் ட்ரெஸ்காவெக் மலைகள் திடீரென்று எழும்பி 679 மீட்டர் (2,230 அடி) உயர்ந்து செல்கிறது. இந்த மலை முழுவதுமே ஒரு கோடக வடிவைப் பெற்று ஆகாயத்தைப் பின்னணியாகக் கொண்டு துல்லியமாகத் தன் வடிவைக் காட்டி நிற்கின்றது. இதில் வேடிக்கை என்னவென்றால், இதனிடையே உள்ள இந்தச் சிறிய பள்ளத்தாக்கும், அந்தப் பள்ளத்தாக்கில் அகழ்ந்து எடுக்கப்பட்ட குடியிருப்புகளின் வடிவங்களும் இதே கோடக வடிவாக அமைந்திருப்பது விந்தையே ஆகும். மலையின் இந்தக் கோடக வடிவே லெப்பென்ஸ்கி வீரில் வாழ்ந்த மக்களுக்கு ஓர் உணர்ச்சியை ஊட்டி இதே வடிவத்தைத் தங்களுடைய கலைப் பொருள்கட்கும் வழங்குமாறு அவர்களைச் செய்ததுபோலும். இந்த வடிவத்திற்கு ஏதோ ஒரு தனி மகத்துவத்தை அவர்கள் அளித்துள்ளனர் என்று நம்ப வேண்டியிருக்கிறது.

மொத்தம் 10 அடி ஆழத்திற்கு நான்கு அடுக்குகளை இதுவரை அப்புறப்படுத்தியுள்ளனர். இவ் அடுக்குகள் ஒன்றின் மேல் ஒன்றாக அமைந்திருப்பதே கி. மு. 5800 முதல் 4700 வரை அதாவது 1000 ஆண்டுகளுக்கு லெப்பென்ஸ்கி வீரில் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்த ஒரு நாகரிகம் வாழ்ந்ததை அறிய முடிகின்றது. மேலாக இருக்கின்ற அடுக்கு கி. மு. 4850 முதல் 4700க்குட்பட்ட மிக பிற்பட்ட கால அடுக்கு ஆகும். இந்த அடுக்கு கறுப்பு நிறமுடைய சாம்பல் நிறத்தோடு கூடிய மண்ணால் நிறைந்து, 'ஏ' 'பி' என்ற இரண்டு தரத்து மக்களின் வாழ்க்கையை அறிவுறுத்தி நிற்கின்றது. ஸ்டார் ஸேவோ மக்களுடன் அதனினும் தாழ்ந்த நாகரிகமுடைய ஒருவித மக்களும் கலந்து வாழ்ந்ததாகத் தெரிகிறது. 'பி' பகுதியிலுள்ள இலை, தழைகள் மக்கிய மண் பகுதியை ஆராயும்போது வரலாற்றுக்கு முற்பட்ட



லெப்பென்ஸ்கி வீர் மக்கள் இறந்தோரை வீட்டினுள்ளே புதைத்தனர். அடுப்பினருகில் கிடந்த எலும்புக் கூடுகள் "கையில் தலைவைத்து உறங்குவது போல்" காணப்பட்டன என்று அகழ்வாய்வாளர் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் மண்டையோடற்ற எலும்புக் கூடுகளையும் எலும்புக் கூடுகளில்லாத மண்டையோடுகளையும் கண்டனர். மண்டையோடுகள் லெப்பென்ஸ்கி வீர் மனிதனுக்குப் பெரிய நெற்றி விளிம்புகள் இருந்தன எனக் காட்டுகின்றன. கல்லறையில் மனித உடலுடன் மான் கொம்புகளும் வைக்கப்பட்டிருந்தன.

Photos © Jean Vidal, Paris

வீட்டிலுள்ள அடுப்புகள் 1 மீட்டர் (3 அடி) நீளமும் 50 செ. மீ. (18 அங்.) அகலமும் இருந்தன. அவற்றைச் சுற்றி 'A' வடிவ அமைப்புகள் இருந்தன. அவை ஓர் அடையாளத்தைக் குறிக்கின்றன என்று சில தொல்பொருளாய்வாளரும், சமையல் கலங்களைத் தாங்கும் கம்புகளைப் புதைக்கும் குழிகளாகப் பயன்பட்டன என்று வேறு சிலரும் கருதுகின்றனர்.

காலத்திலும் வரலாற்றுக் காலத்தி லும் உள்ள பல புதை குழிகள் கிடைக்கின்றன. இதிலிருந்து அறியப் படுவது என்னவெனில், பிற்காலத் தில் வாழ்ந்த சமுதாய மக்களும் இப் பழங் காலப் புதை குழிகளைத் தாமும் பயன்படுத்தினர் என்று அறிய முடிகிறது. 4950, 5600 முதல் 5000, 5800 ஆகிய காலங்களை அடுத்து ஆழமான அடுக்குகளில் காணப்படும் நிலம், வடிவம், இருப்பு ஆகியவற்றைப் பார்த்தால், பிற்கா லத்திய அடுக்குகளிலிருந்து தம்மை நன்கு வேறுபடுத்தி காட்டுகின்றன. எனவே லெப்பென்ஸ்கி வீர் பகுதி சரித்திர காலத்திற்கு முற்பட்ட நாகரிகங்களில் இரண்டு வேறுபட்ட வகைகளை காட்டி நிற்கின்றது. பிற்காலத்திய நாகரிகமும் அன்று பழமையான ஸ்டார்ஸேவோ நாக ரிகத்துடன் கலந்தமை ஐரோப்பா வின் வரலாற்றுக்கு முற்பட்டக் காலத்தில் எதிர்பாராத ஒரு திருப் பத்தை காட்டி நிற்கின்றது.

பரம்பரையாக அமைந்துள்ள கிரா மத்தைப் போலவே லெப்பென்ஸ்கி வீரிலும் கிராமத்தின் மத்தியப் பகுதி கிராமப் பொதுக் கூட்டம் கூடு வதற்கு உரிய இடமாகவும், தெருக் களின் அமைப்பு முறை காலத்திற்கு காலம் மாறுபடுவதாகவும் இருக்கக் காண்கிறோம். ஏறத்தாழ 100 வீடு கள் இப்போது தோண்டி எடுக்கப் பெற்றுள்ளன. எனினும் அவை ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒன்றன் மேல் ஒன்று கட்டப்பட்டு வந்த தாகவே தெரிகிறது. காரணம் குடி யிருப்பை விரித்துக் கொண்டு செல்ல முடியாத இப் பகுதி மிக சுருங்கிய அளவில் நாற்புறமும் அடைபட்டு இருந்தமையே ஆகும்.

சுண்ணும்பு கலந்த சிவப்பு மண் ணுடன் இவ் வீடுகளின் தரைகள் நன்கு பூசப்பட்டுள்ளன. இவற்றின் மேல் வெள்ளை நிறமோ அல்லது இளஞ் சிவப்பு நிறமோ பூசப்பட்டுச் சுவர்களும் கூரைகளும் தோலினுல் ஆக்கப்பட்டிருந்தன. இவற்றை தாங்கு வதற்குரிய கம்பங்களும் குறுக்குச் சட்டங்களும் அமைக்கப் பெற்றிருந் தன. இந்த வீடுகளுங்கூட நாற்கர வடிவத்திலேயே அமைக்கப் பெற்று, கூரைப் பகுதி அகல கட்டை யானப் பகுதியில் சாய்த்து வைக்கப் பெற்றிருந்தன. இவற்றின் முகப்பு அகலமான பகுதியில் நேரெதிரே வைக்கப் பெற்றிருந்தன. ஒவ்வொரு வீட்டின் நுழைவாயிலிலும் இரண்டு எல்லைக் கற்கள் பதிக்கப் பெற்றிருந் தன. ஏனென்றுல், குடியிருப்பவர் கள் இரவு நேரங்களில் வெளியே வரநேரிட்டால் இவற்றின் நடுப் பகுதியில் அமைக்கப் பெற்றுள்ள நெருப்புக் குண்டங்களின்மேல் வீழ்ந்து விடாமல் இருப்பதற்கே ஆகும். இக் குண்டங்கள் மண்ணுலும், சாக் குக் கட்டியினுலும் ஆக்கப்பட்டு இருந் தன.

இந்த ஓம குண்டங்களை அடுத்துப் பலி பீடங்கள் அமைக்கப்பட்டன. உருண்டை ஆக்கப்பட்ட கற்களை பூமி யில் பாதியளவுக்கு புதைப்பதன்மூலம் இவற்றைச் செய்தனர். இந்தப் புதைக்கப்பட்ட கற்கள் சூரிய ஒளியை

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)





லெப்பென்ஸ்கி வீரின் துயர்மிகு முகங்கள்

8000 ஆண்டுகளுக்கு முன் லெப்பென்ஸ்கி மக்கள் ஆற்றுப்படுகையிலிருந்து எடுத்த உருண்டையான மஞ்சள் மணற்பாறைகளினால் இந்த உருவங்களைச் செய்தனர். இவைபோன்ற 30 சிற்பங்கள் வீடுகளில் அடுப்புகளைச் சுற்றி கண்டுபிடிக்கப்பட்டன. தலைகள் இடப்புறம் காணப்படுவதுபோல் 57 செ. மீ. (ஏறக்குறைய 2 அடி) முதல், கை முட்டி அல்லது அதை விடச் சிறிய அளவு வரை காணப்படுகின்றன. இடப்புறம் மேலே விசித்திர உருவம் மீனையும் மனிதனையும் நினைப்பூட்டுகிறது.





Photos © Jean Vidal, Paris

அறிவியல்துறை சாராதவர் அறிவியலை ஆய்கின்றனர்

நாவலாசிரியரும், கவியுமான ராபர்ட் கிரேவ்ஸ், வண்ணம் தீட்டுபவரான ஜோன்மிரோ, கென்யா தலைவர் காலம் சென்ற டாம் எம் போயா, லெபனானின் தத்துவ மேதையும் அரசியல் வல்லுனருமான சார்லஸ் ஹபீப் மாலிக் ஆகியோர் உள்ளிட்ட, சராசரி மக்களையும், குறிப்பிடத் தகுந்த ''விஞ்ஞானிகள் அல்லாதோரையும்'' பற்றிய கருத்துக்களை ''இம்பாக்ட்''(1)—இன்மதிப்பீடு வெளியிடுகிறது.

நிலவில் இறங்குவதற்கு எதிரான கருத்துக்கள், உழைப்பால் வளர்ந்துள்ள நாடுகளில் மிகவும் தீவிரமாக இருக்கின்றன என்று கணக்கெடுப்பு கூறுகிறது. உதாரணமாக ராபர்ட் கிரேவ்ஸ், நிலவுப் பயணங்களின் முக்கியத்துவத்தைத் தீவிரமாக மறுப்பதுடன், அதை, ''வெளிப் பகட்டு விஞ்ஞானம்'' என்று அவர் அழைக்கும் இனத்தில் ஒன்றாகச் சேர்க்கிறார்.

''ஒரு மனிதன் தன் மனைவியையும் குடும்பத்தையும் பட்டினி போட்டு விட்டு, வெளியில் சென்று புதுமையான எதிரிகளுடன் போரில் சண்டையிடுவதைப் போல் இது எனக்குத் தோன்றுகிறது. இந்த உலகம் ஏதாவது ஒரு ஒழுங்கு முறைக்கு வரும்வரை, இது போன்ற செலவு மிகுந்த, ஆபத்தான முட்டாள்தனங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும்'' என்று அவர் கூறுகிறார்.

புகழ்பெற்ற நாவலாசிரியர், விஞ்ஞானத்தையும், பொறி நுட்பத்துறையையும் வன்மையாகத் தாக்குகிறார். பணம் சேர்ப்பது போன்ற இழிவான உள்நோக்கங்களால் விஞ்ஞானம் இப்பொழுது ஆதிக்கம் செலுத்தப்படுகிறது என்று அவர் கூறுகிறார். அது ''கொஞ்சம் கொஞ்சமாக வியாபார மனப்பான்மையினரின் கைகளில் விழுந்து விட்டது''... ''பரந்த நோக்கமுள்ள மனிதர்களும், உண்மையான படைப்பாளிகளும், புதிய அமைப்பாளர்களும் விஞ்ஞானத்தால் ஏற்பட்ட புரட்சிகளையோ அல்லது பயன்களையோ கட்டுப்படுத்த முடியாமல் தடை செய்யப்பட்டு விட்டார்கள்'' என்று கூறுகிறார்.

தொழில்நுட்பத் துறையால் மனிதனுடைய கௌரவத்திற்கும், தனித் தன்மைக்கும், வீட்டின் அன்புச் சூழ்நிலைக்கும் ஏற்பட்டுள்ள அழிவை ராபர்ட் கிரேவ்ஸ் கண்டிக்கிறார். மக்கள் இப்பொழுது செயற்கையான சிறிய ''உயிர்ப் பெட்டிகளில்'' வாழ வேண்டியபடி தண்டிக்கப்பட்டுள்ளார்கள் என்கிறார். நகரங்களில் மிகுந்து வரும் மக்கட்தொகை வெள்ளத்திற்கு, தொழில் நுட்பத் துறையே பொறுப்பு என்று அவர் குறிப்பிடுகிறார். ''விஞ்ஞானமும், தொழில் நுட்பத் துறையும் எந்தப் பிரச்னைகளைத் தீர்க்க வீணாக முயன்று வருகின்றனவோ, அவைகளை விஞ்ஞானமும், தொழில் நுட்பத்துறையுமேதான் தோற்றுவித்தன'' என்கிறார்.

''விஞ்ஞானம், தொழில் நுட்பத்துறை இவைகளின் பலன்களை ஆப்பிரிக்க மக்களுக்குக் கொண்டு வருவதில் சிறிய அளவே நிறைவேற்றப் பட்டிருக்கிறது—அதுவும் அடிக்கடி தவறாகவே செயலாற்றப் பட்டிருக்கிறது என்று ''டாம் போயா'' ஜூலை 1969ல் அவர் கொலை செய்யப்படுவதற்குமுன் கடைசியாக எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆப்பிரிக்க மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தகுந்தபடி அமைக்கப்பட்ட தொழில் நுட்பத் துறைக்காகத்தான் அவர் வாதாடுகிறார். ''பொருத்தமான, உள்ளூருக்குரிய சோதனைகளும் மாற்றங்களும் செய்யாமல் இறக்குமதி செய்யப்படும் தொழில் நுட்பத்துறையானது புதுமையில் கவனமுள்ள ஒரு சில நகரங்களில் துன்பமான ஏற்றத் தாழ்வுள்ள சமூக வாழ்க்கைக்கு அடிகோலும். நாட்டுப்புறத்தைச் சார்ந்த பகுதிகள் எப்பொழுதும் இருந்தது போலவே தான் தொடர்ந்து இருக்கும்'' என்று அவர் கூறுகிறார்.

மனிதத் தன்மையுடையவர்களுக்கு, ''இம்பாக்ட்''—இன் இந்த இதழில் ஒரு முக்கியமான செய்தி இருக்கிறது. 1967இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றுள்ள மிகுவெல் ஏஞ்செல் ஆஸ்டூரியஸ், விஞ்ஞானிகள்—விஞ்ஞானிகள் அல்லாதோரிடையேயும்; அறிவாற்றல் உடையவர்கள்—தொழில் வல்லுனர்கள் ஆகியோரிடையேயும் ஒரு மறு சந்திப்பின் மூலம், விஞ்ஞானத்திற்கும், மனிதப் பண்பிற்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்பக் கோருகிறார். அது, மூன்றாவது உலகத்தின் பிரச்னைகளைத்தீர்க்கத் தெளிவான எதிர்கால வாய்ப்புக்களை அளிக்கும் என்கிறார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் முந்திய தலைவரும், இப்பொழுது 'பெய்ரூட்' அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராக இருப்பவரும் ஆன சார்லஸ் ஹபீப் மாலிக் என்பவர், ''விஞ்ஞானம், தொழில் நுட்பத் துறை ஆகியவற்றின், அளவிட முடியாத, தனியான தகுதியளிக்கப்படும் தன்மதிப்பானது, விஞ்ஞானிகளை அவர்கள்தான் அண்ட சராசரங்களின் தனித் தலைவர்கள் என்று மயங்க வைக்கலாம். அதுவே இன்றைய பெரிய ஆபத்தாகும்'' என்று கருதுகிறார்.

பேராசிரியர் மாலிக், விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தில் ஆபத்தின் மூன்று பகுதிகளைக் காண்கிறார்: ''விஞ்ஞான முதிர்ச்சியானது, தனிமை நிலையை ஒரேயடியாக அழித்து விடலாம். அதனால், நான் எங்கிருக்கிறேன், என்ன செய்து கொண்டிருக்கிறேன், என்ன உணருகிறேன் என்பதையும் கூட எப்பொழுது வேண்டுமானாலும் ஊடுருவியறியக் கூடும்; மனித சந்ததியின் வளர்ச்சியில் தலையிடக் கூடும்; நம் சுற்றுப்புறத்திற்கு மிகுந்த அழிவை ஏற்படுத்துவதுடன், இயற்கையின் மொத்த சமநிலையை, நிலைகுலையச் செய்யக்கூடும்.

''விஞ்ஞானிகள் அல்லாதவரால், விஞ்ஞானத்தைப் பற்றியும், தொழில் நுட்பத்துறை பற்றியும் வெளியிடப்பட்டுள்ள சில கண்டனங்கள், நியாயமற்றவை, வாதப் பொருத்தமில்லாதவை, அல்லது எப்படி விஞ்ஞானம் வேலைசெய்கிறது, என்ன செய்ய முயலுகிறது, என்னவெல்லாம் செய்யவல்லது என்பதைப் புரிந்து கொள்ளாததாக காண்பிக்கிறது என்று எங்களுடைய பல வாசகர்கள், குறிப்பாக விஞ்ஞான வாசகர்கள் கருதலாம்,'' என்று 'இம்பாக்ட்' இதழ் தலையங்கம் கூறுகிறது. எப்படியிருந்தாலும், காரணங்கள் எவையாக இருந்தாலும், அவை எவ்வளவு நியாயமானவையாக இருந்தாலும், இந்த நிலைமை நீடிக்கத்தான் செய்யும்—அவைகளில் பெரும்பாலானவை சந்தேகிக்க முடியாத, நிச்சயமான காரணம் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்க விவரமாகும்'' என்றும் தலையங்கம் கூறுகிறது.

சமூகத்திலிருந்து விஞ்ஞானம் தொடர்பற்று இருக்கும் நிலையை ஆராய்வதற்கு ஒரு—முகமாக ஈடுபட்டுள்ள முத்தொகுதி நூலின் எண்ணிக்கையில், இதழின் ''விஞ்ஞானிகள் அல்லாதோரின்'' வெளியீடு இரண்டாவதாகும். இதழின் முந்தின வெளியீடான ''மகிழ்ச்சியில் விஞ்ஞானமும்—விஞ்ஞானத்தில் மகிழ்ச்சியும்'' என்ற இதழ், விஞ்ஞானத்தில் மகிழ்ச்சியைப் பண்படுத்த வேண்டிய கடமையையும், பண்பாட்டு வாழ்க்கையின் முக்கிய ஓட்டத்தில் விஞ்ஞானத்தை மறுபடியும் நிலைநாட்ட உதவுவதில் உள்ள கடமையையும் வற்புறுத்தியது.

விரைவில் வெளிவரப்போகும் முத்தொகுதியின் மூன்றாவது இதழில் (No. 2,1970), விஞ்ஞானிகள் அல்லாதோரின் கண்டனங்களுக்கு விஞ்ஞானிகள் பதில் கூறுவர். இந்த இதழில், நோபல் பரிசு பெற்ற 'ஆல்ப்ரெட் காஸ்ட்லர்' உள்பட, 9 பிரபல விஞ்ஞானிகள், விஞ்ஞானிகள் அல்லாதோரால் உணர்த்தப்பட்டுள்ள கருத்துக்களை எதிர்த்து வாதாடுகிறார்கள். சில சமயங்களில் ஆதரிக்கிறார்கள். மேலும் மனித வாழ்க்கையின் மீது, தொழில் நுட்பத் துறையினரின் தாக்குதலைப் பற்றி அவர்கள் சொந்தக் கருத்துக்களையும் வெளியிடுவார்கள். நம்முடைய காலத்தின் குற்றங்காணும் கேள்விகளில் ஒன்றாக இருந்து வரும், விஞ்ஞானத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலுள்ள துன்பமான உறவைத் தெளிவாக்குவதற்கும் சரியான தோற்றம் கொடுப்பதற்கும், இம்பாக்ட் இதழின், இந்த முத்தொகுதி நூல்கள் உதவும்.

தமிழில்: சூர்யகுமாரி நடராஜன்.

(1) ''இம்பாக்ட் ஆப் சைன்ஸ் ஆன் சொசைட்டி'' தொகுதி XJX (1969) எண் 4. தனிப்பிரதி $ 1-00. ஆண்டுச் சந்தா $ 3-50.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐயப்பாட்டுக்குரியது. அதற்குரிய சான்றுகள் கிடைத்தில.

ஓவியங்களை சாய்வான ஒளிக் கதிர்களினால் ஆய்ந்து பார்த்தால், உரு வரைகள் பலமுறை வரையப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. குதிரை வீரர், குத்துச் சண்டை, 'ஹாப்லைட்ஸ்' எனும் கிரேக்க காலாட்படைவீரர் சண்டை, மான் வேட்டை, எருதுகள், வேட்டை நாய்கள், புராணப் பறவைகள் போன்ற உருவங்களை இவற்றில் காணலாம். பிறவற்றில் கவிகையின் கீழ் பெண்கள் தலை சீவும் காட்சியைக் காணலாம். போர்க் கவசமும் இரு கால் கவசத் தகடுகளுமே மற்றொரு ஓவியத்தில் தீட்டப் பெற்றுள்ளன.

கீழுலக ஆற்றில் படகோட்டி இறந்தோரின் ஆவிகளை கூலிக்குப் படகிலேற்றிச் செல்வதும், தேவதூதன் குழந்தையின் வண்டியில் கட்டப்பட்டிருப்பதும் போன்ற கிரேக்க புராணக் காட்சிகள் பெரும்பாலும் காணப்படுகின்றன. தொல்பொருளாய்வாளர் இச் சிறந்த ஓவியங்களில் மூவகை நிலைகளைக் கண்டுபிடித்துள்ளனர். அவை பண்டைய கிரேக்கப் பண்பு. வழக்கொழிந்த கிரேக்கப் பண்புக்கேற்ப ஓரளவு வரையப்பட்ட பண்பு, இடச் சூழலுக்கேற்ப வரையப்பட்ட பண்பாகும்.

பண்டைய நகரின் சுவர்களை திரும்பக் கட்டுவதிலும், கடந்தகாலச் சிறப்பைக் காட்டும் மட்கலத் துண்டுகளை ஆய்வதிலும் தொல்பொருளாய்வாளர் பலர் பல ஆண்டுகளாக அயராது உழைத்து வருகின்றனர். ஆழ்துயில் கொள்ளும் பாரவோனின் பதனம் செய்யப்பட்ட உடலையோ, ட்ராய் அல்லது மைசீனியின் கருவூலங்களையோ கண்டுபிடிக்கும் வாய்ப்பைத் தொல்பொருளாய்வாளர் எல்லாரும் பெறுவதில்லை. ஆகவே பீஸ்டம் நகர் தொல்பொருளாய்வாளர் பேறுபெற்றவர்களென்றே சொல்லவேண்டும்.

அவர்கள் கண்டுபிடித்த வியத்தகு பொருள்களை விஞ்ஞான முறைப்படி முற்றிலும் ஆய இன்னும் பல ஆண்டுகளாகும். பீஸ்டத்தின் 140 சுவரோவியங்களும் 5ஆம் நூற்றாண்டின் கல் சவப்பெட்டியின் 5 ஓவியங்களும் ''கிரேக்க ஓவிய வரலாற்றில் முக்கிய கட்டமாகும்'' என அவர்கள் கூறுவது முற்றிலும் உண்மை.

தமிழில் : வள்ளுவன் கிளாரன்சு

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை கவின் மிகு கட்டடங்களை, அவர்கள் நிர்மாணித்துள்ளார்கள். ஆசியாவின் அழகுக் கட்டடங்களை யெல்லாம் அணி செய்யும் பூப்பின்னல் வேலைப்பாட்டை அவர்கள் தான் இத்துணை நயத்துடனும், மென்மையுடனும் கல்லிலே செதுக்க முடியும். முந்நாள் வரை அடிமைகளாக இருந்த அவர்கள், காவலுக்கு ஏந்தி நின்ற வாளைக் கீழே எறிந்ததும், ஆளுநர்க்குரிய அனைத்து அதிகாரமும் பெற்றனர். எதிலும் சிறுமை யென்பதையே தெரியாதவர்களாகக் காட்சியளித்தனர். உலகின் எஞ்சிய பகுதிகளிலுள்ள இஸ்லாமியக் கட்டடக்கலை, அவர்கள் நிர்மாணித்த எதற்கும் சமமாகாது'' என்று 19ஆம் நூற்றாண்டு பிரெஞ்சு யாத்திரீகர் ஜோஸப் கோபினோ எழுதியுள்ளார்.

உதுமான் துருக்கியரின் ஆக்கிரமிப்போடு (1517ஆம் ஆண்டு) கெய்ரோவின் பெருமை படிப்படியாகச் சிதையலாயிற்று. கீழ்த்திசை நாடுகளுடன் அது நடத்திய வாணிபம் தேயலாயிற்று. இருப்பினும் கூட, 19ஆம் நூற்றாண்டுவரை பார்ப்போரைப் பரவசமாக்கும் பல கட்டடங்கள் கெய்ரோவில் எழுந்தன.

நெப்போலியனின் தோற்றத்தோடு (1798ஆம் ஆண்டு) ஐரோப்பாவின் வல்லரசுப் போட்டி எகிப்திலும் எதிரொலித்தது. விரும்பியோ, விரும்பாமலோ எகிப்து நவீன உலகுக்குள் இழுக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட மாறுதல்கள் மகத்தானவை, வேகமானவை. நீல நதிக் கரை ஓரத்திலோ அல்லது இந்நவீன நகரத்தின் தெருக்களிலோ நடந்து செல்லும் ஒருவருக்கு எத்தகைய நெடிய பழமையான வரலாறு கெய்ரோவுடன் பின்னிப் பிணைந்து கிடக்கிறது என்பது புலனாகாது. ஒருக்கால் மேற்கே இறவா பிரமிடையோ, அல்லது கிழக்கே ஸலாஹுத்தீனின் கோட்டையையோ பார்க்கும்போது அந்தப் பண்டைய கெய்ரோவின் நினைவு எழலாம்.

ஆனால் புராதன கெய்ரோவின் வீதிகளிலே பழமை இன்னும் மறைந்துவிடவில்லை. நீல நதியின் பள்ளத்தாக்கிலுள்ள பல இடங்களைப் போன்று கெய்ரோவும் ஒரு புத்தகத்துக்கு ஒப்பானது; அதன் ஏடுகள் கல்லாலானவை. ஒவ்வோர் ஏட்டிலும் மனிதனின் முடிவில்லாத உழைப்பின் தெளிவான விவரங்கள் தவறாது குறிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஏடு ஒவ்வொன்றும் போவோர் வருவோரை யெல்லாம் அழைத்து, வெவ்வேறு காலத்தில், பல்வேறு இடத்தில் வாழ்ந்த சோதர மனிதர்கள் எவ்வாறு இருந்தார்கள் என்பதை எண்ணி, வியந்து பார்க்கத் தூண்டுகிறது. இப்படி வியந்து சிந்தித்து நிற்பதற்கு, வேறெந்த நகரையும் விட கெய்ரோ சிறந்த பலனைத் தரும்!

தமிழில் : அப்துல் வஹ்ஹாப்

(30ஆம் பக்கத் தொடர்ச்சி)

யொத்த ஓவியங்களைப் பெற்றிருந்த காரணத்தால் சூரியனின் ஒளிக் கதிர்களை நினைவூட்டச் செய்யப் பெற்றனவோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

சம கோண முக்கோண வடிவில் அமைக்கப்பெற்ற பல தட்டையான கற்கள் குண்டங்களைச் சுற்றி வைக்கப்பட்டிருப்பதன் பொருள் ஒன்றும் விளங்கவில்லை. இறந்தவர்கட்கும் வாழ்பவர்கட்கும் இடையே உள்ள தொடர்பை அறிவுறுத்தும் அடையாளமாக அது இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பல்வேறு கட்டங்களில் கருவிகள், ஆயுதங்கள், 25 முதல் 50 செ.மீ. நீளமுள்ள தடிகள் எலும்புகளாலும், கற்களாலும் ஆன ஆபரணங்கள் என்பவற்றுடன் கி.மு. 5000 முதல் கி.மு. 5600 வரையுள்ள காலப் பகுதி சட்டி பானைகள் என்பவையும் கிடைத்துள்ளன.

லெப்பென்ஸ்கி வீர் பகுதியில் வாழ்ந்த மக்களை மட்பாண்டக் கால அல்லது அதற்கும் முற்பட்ட கால மக்கள் என்று கூறப்படுவதால் இந்த சட்டி பானைச் சில்லுகள் ஸ்டார்ஸேவோக் காலத்தைச் சேர்ந்தவையாகும் என்று அனுமானிக்கப்படுகிறது. கி.மு. 5600 என்ற காலவரையறை ஸ்டார்ஸேவோ நாகரிகத்திலும் முற்பட்ட காலமாகலின் புதைபொருளாராய்ச்சியாளர்க்கு ஒரு புதிய பிரச்னையைத் தோற்றுவித்துள்ளது.

சுவர்களைத் தாங்குவதற்காக உள்ள சட்டங்களைத் தாங்கி நிற்பதற்குப் பயன்படுத்தப்பெற்ற கவட்டைத் தூண்கள் தற்காலத்தில் உல்லாசப் பயணம் போகின்றவர்கள் தங்களுடைய 'டேராக்களை' அடிப்பதற்குப் பயன்படுத்தும் 'ஸ்லீவ் ஜாய்ண்ட்'களைப் போலவே இருந்தது மற்றொரு அதிசயமாகும். நான்கு வீடுகள் தவிர ஏனைய வீடுகள் எல்லாம் மேற்குப்புறமாக நோக்கி, அவற்றினுடைய அகலமானப் பகுதி திரஸ்காவெக் மலையை நோக்கி இருக்குமாறு கட்டப்பட்டிருந்தன. இதன் பயன் என்னவெனில், கீழ் காற்று வீட்டினுள் நுழையாமல் வீடுகளின் பக்கவாட்டில் அடிக்குமாறு செய்ததேயாகும். மிகவும் ஆழ்ந்த சிந்தனையின் பேரிலும், திட்டமிட்டும், கட்டப்பெற்றிருந்த இவ் வீடுகள் இதனைக் கட்டியவர்களுடைய வேலைத் திறன், அனுபவ கணித அறிவு, உள்ளே புழங்குபவர்கள், எளிதாகப் புழங்குவதற்குரிய முறையில் அமைக்கப்பட்ட சிறப்பு ஆகியவற்றையெல்லாம் நோக்கும் பொழுது சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலத்தில் லெப்பென்ஸ்கி வீர் ''ஒரு மிகப் புதுமை வாய்ந்த சமுதாய''மாக இருந்தது என்று நினைக்கத் தோன்றுகிறது.

லெப்பென்ஸ்கி வீர் மக்கள் சிறந்த முறையில் பழங்களைச் சேகரிப்பவர்களாகவும், வேட்டையாடுபவர்களாகவும், மீன் பிடிப்பவர்களாகவும் வாழ்ந்தனர். அவர்களுடைய வாழ்வு முடிவதற்கு முன்னரே நிலத்தை ஓரளவு பண்படுத்தி சாதாரண முறையில் வேளாண்மை செய்யவும், ஆடு மாடுகள் வளர்க்கவும் பழகியிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

வீடுகளுக்குள் அமைக்கப்பட்ட ஓம குண்டங்களில் எவ்விதமான சடங்குகள் நடைபெற்றன என்பதை இப்பொழுது அறிய வாய்ப்பில்லை. மீன்கள், மான்கள், நாய்கள் ஆகியவை பலியிடப்பட்டன. பலிபீடத்தின் பக்கத்தில் சுவர்ச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ள விலங்குகளின் வடிவங்கள் மேலே கூறிய மூன்றுமே ஆகும். அவற்றினுடைய எலும்புகளும் அதன் பக்கத்தில் கிடைக்கின்றன.

லெப்பென்ஸ்கி வீர் மக்கள், இந்த ஓம குண்டத்தின் பக்கத்திலேயே இறந்த பிறகு புதைக்கப்பட்டதாகத் தெரிகிறது. பேராசிரியர் ஸ்ரோ

ஜோவிக் கூறும் முறையைப் பார்த்தால், அவர்கள் ஏதோ முழங்கையைத் தலைக்கு வைத்துக்கொண்டு அப்படியே உறங்கிப் போனதுபோலத் காணப்படுகிறது.

மிகப் பழமையான குடியிருப்புகளில் தோண்டி பார்த்தபொழுது உடலின் எலும்புக் கூடுகள் இல்லாமல், மண்டை ஓடுகளின் சில பகுதிகளையே கண்டார்கள். இப்பொழுது தோண்டப்பட்டப் பகுதிகள் இதற்கு முன்னர் யாராலும் தோண்டப்பட வில்லையென்ற கட்சியை ஒத்துக்கொண்டால், இறந்தவர்களின் தலைகளை மட்டும் பாதுகாத்தார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. பிற்காலச் சந்ததியார்களும் இதே பழக்கத்தை மேற்கொண்டனர் என்றும் நினைக்கலாம். இன்னும் பிற்காலத்தில் உடம்பு முழுவதையும் புதைத்ததையும், தலைகள் இல்லாத முண்டங்களையும், முண்டங்கள் இல்லாத தலைகளையும் புதைத்ததையும் அறிய முடிகிறது. கூடுமான வரை ஒரு கலைமானின் கொம்புகள் இறந்தவர்களின் பக்கத்தில் புதைக்கப்பட்டதோடு ஒரு சில சமயங்களில் மான்களின் மண்டையோடுகளும் புதைக்கப்பட்டன.

லெப்பென்ஸ்கி வீரில் கண்டுபிடிக்கப்பட்ட செதுக்கு ஓவியங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. மனிதர்களின் தலைகள், விலங்குகளின் தலைகள் ஆகியவை உண்மை வடிவின் அளவையொத்தே இருந்தன. இதற்கு முன்னர் பிற இடங்களில் காணப்பட்ட வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட செதுக்கு ஓவியங்கள் அனைத்தும் அளவால் மிகமிகச் சிறியனவாகவே உள்ளன.

லெப்பென்ஸ்கி வீரின் சிற்பிகள் தம் சிற்பக் கலையைச் செய்வதற்கு ஆற்றின் வேகத்தால் நன்றாக வழவழப்பாக ஆக்கப்பட்ட கற்களையே பயன்படுத்தினர் என்று தெரிகிறது. இந்தக் கற்களின் அமைப்பை மாற்றாமல் சிற்பிகள் இதற்கு வடிவு கொடுத்தனர். பேராசிரியர் ஸ்ரோஜோவிக் சொல்லுகின்ற முறையில் இந்தச் சிற்பிகள் கற்களை வணங்குகின்றவர்கள் ஆதலால் சிற்பத்திற்குப் பயன்படுத்தப்பட்ட கற்களைக்கூட பழைய வடிவம் கெடாமல் பார்த்துக் கொண்டார்கள் என்று தெரிகிறது.

யுகோஸ்லேவியா அரசாங்கம் தந்துள்ள பேருதவியின் காரணமாக லெப்பென்ஸ்கி வீர் வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்டு வருகிறது. மிக விரைவில் டான்யூப் நதியின் நீர் மட்டத்திற்கு மேற்பட்ட ஓரிடத்தில் இந்தக் குடியிருப்பு முழுவதும் மாற்றப்பட்டு விடும்.

தமிழில்: அ. ச. ஞா.

யுனெஸ்கோ செய்தியறை

உலகக் கல்வி — ஒரு திருப்புமுனை

பதினைந்து வயதுக்குக் குறைந்த 150 கோடி தொகையுள்ள சிறுவர்களுக்கு, இவ் வுலகம் இன்று கால் பங்கினர்க்குக் கூட தொடக்கக் கல்வி அளிக்க முடியவில்லை; பன்னிரண்டில் ஒருவருக்குக்கூட நடுத்தரக் கல்வி அளிக்க முடியவில்லை. இக்கவலை தரும் உண்மைகள் அண்மையில், யுனெஸ்கோ 1970ஆம் ஆண்டு (1) பன்னாட்டுக் கல்வி ஆண்டுக்கென தயாரித்த 34 நிமிட டெலிவிஷன் படத்தில் வெளியாகியுள்ளது. கல்வித் துறையில் இன்னும் எவ்வளவு செய்யப் பட வேண்டியிருக்கிறது என்பதை இப்படம் நினைவூட்டுகிறது; அவையாவன: ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுக் கருவிகள் பற்றாக்குறை, திட்டக் குறைபாடுகள், மாற்றத்துக்கான எதிர்ப்பு, காலத்துக்கு ஒவ்வாத பயிற்று முறைகள் ஆகியவை. தவிரவும் அது நம்பிக்கையூட்டும் பலவற்றையும் தெரிவித்துள்ளது. காட்சி மற்றும் கேள்விக்கான சாதனங்களை மேன்மேலும் பயன்படுத்துதல், வாழ்நாள் முழுவதும் கல்வி கற்பதில் ஆர்வம் கூடிவருவதும் எடுத்துக் காட்டுகளாகும்.

(1) 16 மி.மீ. வெள்ளைக் கருப்புப் படம். ஆங்கிலம், ஃபிராஞ்சு, ஸ்பானிஷ் அல்லது ரஷிய மொழிகளிலான வருணனையுடன் கிடைக்கும்: யுனெஸ்கோ ஆர்விஜ. பிளேஸ் ஃதெ பான்டினாய் பாரீஸ்-7

பன்னாட்டுக் கல்வி ஆண்டுக்காக 30,000 நகரங்கள்

உலக நகரங்களுக்கிடையே இணைப்பையும் நட்பையும் பெருக்குவதில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நகரங்களின் கழகமானது பன்னாட்டுக் கல்வி ஆண்டுக்கு (1970) உறுதுணை புரியும் வகையில் இவ்வாண்டு முழுவதும் பல நிகழ்ச்சிகளை நடத்தவிருக்கின்றது. ''உலகின் இணைந்த நகரங்களின் நாள்'' இவ்வாண்டு கொண்டாடும் போது அதன் கருப் பொருளாக பன்னாட்டுக் கல்வி ஆண்டு அமைந்துள்ளது. 30,000 நகரங்களும் பட்டணங்களும் இதைக் கொண்டாடும்.

ஏழு மொழிகளில் விண்வெளி அகராதி

பன்னாட்டு விண்வெளிக் கழகத்தினரால் முதன் முதலாக விண்வெளி அகராதி (1) ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. 9 நாடுகளைச் சேர்ந்த 100 அறிவியலாளர்கள் தயாரித்த இவ் வகராதி கிட்டத்தட்ட 5000 ஆங்கில அறிவியற் தொழிற் நுணுக்கச் சொற்களையும் அவற்றுக்கு ஈடான ரஷிய, ஜெர்மானிய, ஃபிரெஞ்சு, இத்தாலிய, ஸ்பானிஷ், செக்கோஸ்லாவாகிய சொற்களையும் கொண்டுள்ளது. இதில் உள்ள சட்டப் பிரிவில் 900 குறிப்புகளும் அவற்றுக்கீடான மொழி பெயர்ப்புகளும் காணப்படுகின்றன.

(1) ''அஸ்ட்ரனாட்டிகல் மல்ட்டி லிங்குவல் டிக்ஷனரி ஆப் தி இண்டர்நேஷனல் அகாதெமி ஆப் ஆஸ்ட்ரனாட்டிக்ஸ்'' அகாதெமியா பப்ளிஷிங் ஹவுஸ் ஆஃப் தி செக்கோஸ்லோவாக் அகாதெமி ஆப் சயன்ஸ், வொடிக்கோவா 40, பிரேக்1 — நோவேமெஸ்டோ, செக்கோஸ்லோவாக்கிய, விலை டாலர் 31. 50, பவு 13. 10., ஃபிராங் 207.

அம்மை நோய் பின் வாங்குகிறது

1967இல் உலக சுகாதார நிறுவனம் உலகம் முழுவதிலும் சென்று நிறுவிய அம்மை ஒழிப்பு இயக்கத்தின் விளைவால் முதல் ஆண்டிலேயே ஏறக்குறைய 60 சதவிகிதத்துக்கு அது குறைந்து விட்டது. 1967இல் 128, 300 ஆக இருந்த நோய்க் கணிப்பு 1969இல் 56,000—மாகக் குறைந்து விட்டது. நோய் காணப்படும் நாடுகள் 43லிருந்து 29க்குக் குறைந்து விட்டன.

மறிமான் காக்கும் சட்

டாக்ஸ், ஆரிக்ஸ் என்னும் மறிமான் வகைகள் இடம் மாறுவதைத் தடுக்கவும், மேய்ச்சல் நிலத்தைப் பாதுகாக்கவும் சட்பகுதி தனது வடபாலைவனத்தில் ஒரு வனவிலங்குக் காப்பிடத்தை ஏற்படுத்தியுள்ளது. உணவு வேளாண்மைக் கழகத்தின் ஆராய்ச்சினால் நாட்டின் 90 சதவிகித கால்நடைகள் (10,000, ஆடாக்ஸ் மற்றும் 40,000 ஆரிக்ஸ், கடந்த 20 ஆண்டுகளில் கொல்லப்பட்டன என்று தெரியவருகிறது.

செய்திக் கதிர்கள்

● 1968இல் உலக முழுவதுமாக சேர்ந்து பிடிபட்ட மீன் 6 கோடி 40 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். முன் எப்போதையும்விட இது அதிகமாகும். 1967இல் பிடிபட்டது 3 கோடியே 30 இலட்சம் மெட்ரிக் டன்களே என்று உலக உணவு வேளாண்மைக் கழக அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

● யுனெஸ்கோ மற்றும் ஐ.நா. வளர்ச்சி திட்டத்தின் உதவியுடன் ஐவரி கோஸ்ட் நாட்டின் அபிட்ஜான் நகரத்தில் கல்வி ஆராய்ச்சிக்கூடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

● மனிதன் தவறாகப் பயன்படுத்துவதன் காரணமாக, நில அரிப்பு ஏற்பட்டு உலக விளைநிலங்களில் 15 விழுக்காடு பாதிக்கப்பட்டு அதன் காரணமாக ஆண்டு தோறும் 40 கோடி டாலர்கள் விரயமாவதாக உணவு வேளாண்மைக் கழகம் அறிவிக்கிறது.

● யுனெஸ்கோ நிபுணர்கள் அறுவர் குவெய்ட் நாட்டில் தொழிற்கல்வி அளிக்கும் திட்டமொன்றிற்கு உதவி, அதன் வழி 1000 தொழில் நுட்ப பயிற்சி பெற்றவர்களை அடுத்துவரும் 5 ஆண்டுகளுக்குள் உருவாக்க முயன்று வருகிறார்கள்.

Edited and published by T. P. Meenakshisundaran for the Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.

ஃபீல்டு மானுவல் ஃபார் மியூஸியம்ஸ்

யுனெஸ்கோவின் பொருட்காட்சிச்சாலை, நினைவுச் சின்னத் தொடரின் 12-வது எண்

- சுற்றுப் பயணங்களையும் ஆய்வுப் பணிகளையும் நடத்தும் முறை பற்றி அறிவிக்கும் கையேடு. இது தொல்பொருளாய்வு, இனப் பரப்பு விளக்கவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளில் வல்லுநரின் துணையுடன் தயாரிக்கப்பெற்றது.
- புதைபொருள்களைக் காணும் வாய்ப்பினை ஆய்ந்து அவற்றை அகழ்ந்தெடுக்கும் முறைகளையும், அவற்றை இனம் வகுத்து ஆதாரச் சான்று கூறும் அடிப்படை முறைகளையும் விவரிக்கின்றது.
- புவி அமைப்பியல், தாவர இயல், இனப் பரப்பு விளக்கவியல் விலங்கியல் சார்ந்த ஆய்வுகளின் முறைகளைக் கூறுகிறது.



171 பக்கங்கள்
விலை $ 7-00
(£ 2-00)



அண்மை வெளியீடு

மும்மொழிகளில்:
ஆங்கிலம்
பிரெஞ்சு
ஸ்பானிஷ்

549 பக்கங்கள்
விலை $ 8·50
51/- (£ 2·55)
34 பி.

ஓவியங்களின் படங்களடங்கிய தொகுதி 1860 முதல் 1969 வரை

9ஆம் பதிப்பு, முற்றிலும் திருத்தி விரிவாக்கப் பெற்றது.

- உலகப் புகழ் ஓவியங்களின் 1,548 படங்களை யுனெஸ்கோ வரிசைப் படுத்தியுள்ளது; இவை ஒரு நூற்றாண்டில் பல நாடுகளில் தீட்டப் பெற்றவை.
- ஓவியத்தின் உண்மைத் தோற்றத்தைப் படம் காட்டுதல், ஓவியரின் மாண்பு, ஓவியத்தின் சிறப்பு ஆகிய அடிப்படைகளில் இவை தேர்ந் தெடுக்கப் பெற்றுள்ளன.
- ஒவ்வொரு படமும் கருப்பு வெள்ளை நிறமுள்ளது. ஓவியத்தையும் படத்தையும் பற்றி முழு விவரங்களைத் தருகின்றது.

யுனெஸ்கோ கூரியர் - தமிழ்ப் பதிப்பு

ஐ. நா. வின் அங்கமாக உலக கல்வி, விஞ்ஞான, கலாச்சார மேம்பாட்டுக்கு இடையறாது பாடுபட்டுவரும் யுனெஸ்கோ அமைப்பின் மாத வெளியீடே 'யுனெஸ்கோ கூரியர்' இதழ்.

பலதுறை அறிவும் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய பதின்மூன்று உலக மொழிகளில் வெளிவரும் 'யுனெஸ்கோ கூரியர்' இதழ் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழிலும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

உலகைக் காட்டும் பலகணியாக அமைந்துள்ள இவ்விதழ் உலகம் முழுவதற்கும் அக்கறையுள்ள பிரச்னைகளைப்பற்றி உலக அறிஞர்கள் பலரும் எழுதும் சிந்தனை வளமிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்ட அறிவுக் களஞ்சியமாக மாதந் தோறும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

அகில உலகப் பிரச்னைகளை நடு நிலைமையில் அணு அணுவாக அறிந்துகொள்ள உதவும் ஒரே சர்வதேச தமிழ் இதழ் இதுவே யாகும்.

பக்கத்துக்குப் பக்கம் ஏராளமான படங்களையும் கவர்ச்சியான அழகிய அச்சு, அமைப்பும் கொண்ட இவ்விதழை மாணவர்களும் கல்வி நிலையங்களும் நூலகங்களும்—ஏன்—அறிவுத்தாகம் கொண்ட அனைவருமே இதழின் சந்தாதாரராகச் சேருவதன் மூலம் தம் உலக அறிவை வளர்க்க-வளப்படுத்திக்கொள்ள அருமையானதோர் வாய்ப்பு.

ஆண்டுச் சந்தா ரூ. 10-50 கல்வி நிலையங்களுக்கு ரூ. 9-50 தனிப்பிரதி ரூ. 1-00.

தொடர்பு கொள்க:

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை
கீழ்ப்பாக்கம் : : சென்னை-10.

REGD. NO. M.



Photo © Paul Almasy, Paris

1000 ஆண்டுகளாக கெய்ரோவின் சிறப்பிடமாகத் திகழுவது அல்-அஸ்ஹர். ஏறக்குறைய இஸ்லாம் தோன்றியதிலிருந்து எகிப்தின் தலைநகராக விளங்கும் கெய்ரோவின் வரலாற்றை வகுத்து வந்த நாகரிகங்கள், பண்பாடுகள் ஆகியவற்றின் இயல்புகளை அதன் பலவகை கட்டடக் கலைகளில் காணலாம் (10ஆம் பக்கக் கட்டுரையைப் பார்க்கவும்). இங்கு பண்டைய அல்-அஸ்ஹர் (பேரொளி) மசூதியின் ஒடுங்கிய தூபி உயர்ந்து விளங்குகிறது. கி. பி. 970இல் நிறுவப் பெற்ற அல்-அஸ்ஹர் சிறந்த இஸ்லாமியப் பல்கலைக் கழகமாகப் பல்லாண்டுகளாகப் பணியாற்றி வந்துள்ளது.